மனிதநேய பாதுகாப்பு ஆர்கனைஷேசன்

मानवता संरक्षण संगठन

HUMANITY PROTECTION ORGANIZATION

REGD. No. 104/2007

ஒன்றேகுலம் ஒருவனேதேவன் வாய்மையேவெல்லும்

Registration Madurai Dist Consumer No : 706/2016 NGO Membership : 2011/0046823 Social Welfare : 830/2013

2/1, Navalar Nagar 1st Street, (Opp. K.M. Mahal), S.S. Colony, Bye-Pass Road, Madurai - 625 016.

E-mail : asokan121@gmail.com Website : www.humanityprotectionorganization.com Facebook : hpomdu

Cell : 98650 91526, 99525 33887 Phone : 0452 - 2600100


# நுகர்வோர் சட்ட விதிகளும் விளக்க உரைகளும் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் - 2006

தொகுப்பு :


**Dr. N. அசோகன்** B.A.(SW), D.Litt.,

நிறுவனர் & தலைவர்,

மனிதநேய பாதுகாப்பு ஆர்கனைஷேசன், மதுரை



Published by :

ATC

**ATC. இராதாகிருஷ்ணன்** M.Sc., R.B.V.,

நிறுவனர்

**ACCOUNT TEST CENTRE**

**(LAW BOOKS DIVISION)**

P.B.No.777, No.1, Convent Lane, Kamarjar Salai,

Madurai - 625 009. Email : atcosr@gmail.com

Cell : 93441 03065

*Published by :*

**Account Test Centre**
**Madurai - 625 009.**

© All Rights Reserved with NLBA
December 2013 (Silver Jubilee Year)

**Price Rs. 150/-**

No efforts have been spared in avoiding errors, omissions or insertions various stages while publishing this book, however any suggestions for its corrections and improvement are heartily invited. Further its notified that this publication is being sold on the condition and understanding that neither the Publisher or the Author or the Printer would be responsible for any loss or damage caused to anybody therefrom.

*- Publisher*

**முக்கிய அறிவிப்பு :** இதனால் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் இப்புத்தகத்தை வெளியிடுவதில் எல்லா கவனமும் எடுத்துக் கொள்ளப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆகவே இந்த புத்தகத்தில் உள்ள பிழை, அச்சுப்பிழை அல்லது விடுபட்டது ஆகியவற்றால் ஏற்படும் எவ்விதமான இழப்பிற்கும் நூலாசிரியர், வெளியீட்டாளர் மற்றும் அச்சுத்தாரர் பொறுப்பல்ல.

# முன்னுரை

*எங்கும் தமிழ் எதிலும் தமிழ்*
*எண்ணுக தமிழில் எழுதுக தமிழில்*
*பழகுக தமிழில் பயிலுக தமிழில்*
*வணங்குக தமிழில் வாழ்த்துக தமிழில்*

மேற்காணும் தமிழக அரசின் கொள்கைக்கு ஏற்றவாறு, வளமும் வனப்பும், இழைவும் குழைவும், நுட்பமும் திட்பமும் ஒருங்கே பொருந்தியுள்ள நம் தமிழ் மொழியில் **"உணவு பாதுகாப்பு தர நிர்ணயங்கள் சட்டம் & விதிகள்"** எனும் இப்புத்தகத்தில் சட்டக் கருத்துக்கள், தீர்ப்பரைகள் தமிழ் மொழியில் கூறப்படும் பொழுது, தெளியும் தேற்றமும் பெறுகின்றன.

"நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது, வழங்கப்படுவது நீதிதான் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ளும் வகையில் அது வழங்கப்பட வேண்டும் என்பது நீதிமுறையின் அடிப்படைக் கொள்கையாகும். இது மக்களாட்சியின் அடிப்படை நெறியாகும்."

*நீதி செலுத்தப்பட்டால் மட்டும் போதாது;*
*நீதி செலுத்தப்படுவது புலப்பட வேண்டும்.*

மூதுரை.

மேற்காணும் அடிப்படை நெறிக்கேற்ப பொதுமக்கள் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் இப்புத்தகத்தில் நீதமன்ற தீர்புபரைகள் இணைக்கப்பட்டுள்ளன. பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையல் எமது நிறுவனம் பல்வேறு சட்டங்களைத் தமிழில் மொழியாக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டதன் விளைவாக மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை செயல்படத் துவங்கி வழக்கு மொழியாக தமிழ் அறிவிக்கப்படவுள்ள இத்தருணத்தில் இப்புத்தகம் உங்கள் கைகளில் தவழ்கிறது. நீதிமன்ற மொழி மக்களின் தாய்மொழியான தமிழில் இருக்க வேண்டும். நீதிமுறை நெறியானது நாட்டு மக்கள் நலமுற அறிய வேண்டுமெனில் நீதிமன்ற மொழி மக்களுக்குப் புரியும் வகையில் அவர்களது தாய்மொழியாகவே இருத்தல் வேண்டும். மக்களின் தாய்மொழியில் நிதி வழங்கப்பெறுவதே நீதிமுறையின் நெறியாகிறது. எனவே சட்டத் தமிழ் வளர்த்து நீதிநெறி பேணும் நமது முயற்சிக்கு எல்லோருடைய ஆதரவையும் வேண்டுறோம். சட்டத் தமிழில் 100 நூல்களை வெளியிட்டுள்ள ஒரே நிறுவனமான எமது நிறுவனத்திற்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவிற்கு நன்றி.

இங்ஙனம்
**ATC. இராதாகிருஷ்ணன்** M.Sc., R.B.V.,
நிறுவனர், ATC பதிப்பகம், மதுரை

அலுவலகம்
பா.ச. ராமகிருஷ்ணன் M.A.,
காவல்துறை துணைகண்காணிப்பாளர்
போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு,
மதுரை மற்றும் இராமநாதபுரம் சரகங்கள்,
விஸ்வநாதபுரம்,மதுரை-625014.

காவல்துறை தலைமை அலுவலகம்,
போதைபொருள்தடுப்பு பிரிவு,
பாந்தியன் சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.

நாள் : 23.08.2019

# வாழ்த்து மடல்

அன்புடையீர்,

**Dr.N.அசோகன்,** மனிதநேய பாதுகாப்பு அமைப்பின் நிறுவனத் தலைவர். மட்டிலார் மாண்புமிகு மரியாதைக்குரியவர் இன்று சுயநலமின்றி விதைக்கும் விதைகள் என்ற மனித உரிமை பாதுகாப்பு சமூக தொண்டு ஒருநாள் உலகே வியக்கும் வண்ணம் அறுவடைக்கு தயாராவர். அவரின் சுயநலமற்ற தொண்டை பற்றி அவரிடம் சில காலம் பயணம் செய்து வரும் எனக்கு பெரிய வியப்பை அளிக்கிறது. குறிப்பாக நீதிமன்ற நடுவர்கள் சமூகபற்று உள்ளவர்களை ஒன்றுசேர்க்கும் பாங்கும் மக்களுக்கு மனிதநேயத்துடன் மருத்துவம் மற்றும் கல்வி, நீதி, சமூக செயல்பாடுகள் அரசுப்பள்ளிகள், அரசு சார்ந்த கல்லூரிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனைத்து துறை சார்ந்த பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் அனைத்தும் மிகவும் அருமை.இச்சங்கம் இப்புத்தகத்தை வெளியிடுவது மிகவும் பெருமைக்குரியது. இச்சங்கத்தின் நிறுவனர் -தலைவர் வருகின்ற 10.10.2019 அன்று தேசிய நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு விழாவில், **நுகர்வோருக்கான சட்டவிதிகளும், விளக்க உரைகளும் மற்றும் உணவுப்பாதுகாப்பு சட்டம் -2006 நூல் வெளியிடுவது** பாராட்டுக்குரியது.

ஆண்டவன் கொடுத்த அறிவுச்செல்வம் அனைத்தையும், அன்புடையீர் அறியாமையில் இருக்கும் சமூகத்திற்கு அணையாத விளக்காய் இருந்து தொடர்ந்து மட்டிலா இத்தொண்டை செய்ய வேண்டி உள்ளம் கனிந்து என் இனிய, இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



இப்படிக்கு

**பா.ச. ராமகிருஷ்ணன்** M.A.,
காவல்துறை துணைகண்காணிப்பாளர்
போதைப் பொருள் தடுப்பு காவல் நுண்ணறிவுப்பிரிவு,
மதுரை மற்றும் இராமநாதபுரம் சரகங்கள்,
விஸ்வநாதபுரம்,மதுரை-625014.

**Kuttalam Law Office**
Chamber No. 73,
High Court Law Chambers
Madurai - 625 023.

**K. SAMIDURAI** M.A.B.L.,
**Advocate - High Court**
Office : 60, Bharathiula Street,
Race Course, Madurai - 625 002.

Cell : 98940 23236
E-mail : k.samidurai65@gmail.com

Date : 27. 08. 2019

## வாழ்த்துமடல்

மனிதநேய பாதுகாப்பு அமைப்பின் நிறுவன தலைவர் **Dr.N.அசோகன்** அவர்கள் தொகுத்து வழங்கிய நுகர்வோர் சட்ட விதிகளும், விளக்க உரைகளும் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் - 2006 (Food Safety and Standards Act - 2006) என்ற நூலிற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நண்பர் **N.அசோகன்** கடந்த 20 ஆண்டுகாலமாக எங்களோடு நெருங்கிய நட்பு வைத்து இந்த சமுதாயத்திற்கு பல நல்ல காரியங்களை செய்து வருவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். தன் பெண்டு, தன் வீடு, சோறு, வீடு, சம்பாத்தியம் என்று இல்லாமல் சமுதாயத்தின் மீது அக்கறையோடு செயல்படுகிறார். மேலும் இந்த நூலில் இருக்கக் கூடிய கருத்துக்கள் நுகர்வோருக்கு மட்டுமல்லாமல் பொதுமக்கள் எளிதாக அதிகாரிகளை எவ்வாறு சந்திப்பது, பொதுமக்களுக்கு என்ன என்ன சலுகைகள் அரசாங்கம் கொடுத்திருக்கிறது என்பதை எளிமையாக தெரிந்து கொள்ளவும் இந்த நூல் மிகவும் உதவியாக இருக்கிறது.

மேலும், அன்பு நண்பர் **N.அசோகன்** மேலும் பல சமூக நூல்களை வெளியிடுவதற்கு இந்த நூல் மணிமகுடமாக இருக்க அன்புடன் இதயப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.



(K.SAMIDURAI)

## நுகர்வோர் சட்ட விதிகளும், விளக்க உரைகளும்

### “நுகர்வோர் கவனத்திற்கு”

**“நீதி செலுத்தப்பட்டால் மட்டும் போதாது! நீதி செலுத்தப்படுவதை எல்லோரும் உணர்ந்து (செயல்பட) புலம்பட வேண்டும்!!”**

### நுகர்வோர் நலன் காக்கும் சட்டங்கள்

1. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 1986
2. நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் - 1987
3. தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் - 1988
4. தமிழ்நாடு மாநில நுகர்வோர் நலவிதிகள் - 2007

### நுகர்வோர் விழிப்புணர்வு

5. தொலைபேசி குறைகளை நிவர்த்தி செய்ய நடைமுறைப்படுத்தப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு - 2007
6. உணவுப் பொருட்கள் சம்பந்தமாக நுகர்வோர் விழிப்புணர்வு
7. மொபைல் போன் - நுகர்வோர் விழிப்புணர்வு
8. குடியிருப்பு வீடுகள் - நுகர்வோர் விழிப்புணர்வு
9. மருத்துவமனைகள் - நுகர்வோர் விழிப்புணர்வு
10. மருத்துவமனைகள் முறைப்படுத்துதல் சட்டம்
11. போக்குவரத்துப் பயணிகளுக்காக
12. காப்பீடுகளை ஒழுங்குபடுத்தும் மற்றும் விரிவாக்கமையம்
13. இல்லறப் பொருட்கள் - நுகர்வோர் விழிப்புணர்வு
14. தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவிண்மைச் சட்டம்
15. கடன் அட்டை - ரிசர்வ் வங்கி தலைமை அறிவிப்பு
16. பலசரக்குகளின் நுகர்வோர் குறைகள்
17. ரேசன் கார்டு - நுகர்வோர் விழிப்புணர்வு
18. கல்வி சம்பந்தமாக - நுகர்வோர் விழிப்புணர்வு
19. வாகனம் சம்பந்தப்பட்ட - நுகர்வோர் விழிப்புணர்வு

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நுகர்வோர்களுக்கு என்னென்ன உரிமைகள் சட்டம் 1986-இன் படி**

1. பாதுகாப்பு உரிமை
2. தகவல் பெறும் உரிமை
3. அடிப்படைத் தேவை உரிமை
4. தேர்ந்தெடுக்கும் உரிமை
5. கேட்டறியும் உரிமை
6. விருப்பத்தினைத் தேர்வு செய்யும் உரிமை
7. குறைகளை நிவர்த்தி பெறும் உரிமை
8. குறைதீர்க்க கேட்கப்படும் உரிமை
9. நுகர்வோர் கல்வி பெறும் உரிமை
10. சுகாதாரச் சுற்றுச்சூழல் உரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39ஆவது பிரிவில் மாநில கொள்கையின் அடிப்படையில் உரிமைகளில் நாட்டின் குடிமகனின் நல்வாழ்வை மேம்படுத்தும் கொள்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சில நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் அடிப்படை உரிமைகள், வாழ்வதற்கான உரிமை, சமத்துவம் இவற்றை அடிப்படையாகக் கொண்டே உள்ளது. நுகர்வோருக்கு பொருள்கள் மற்றும் சேவைகளை பகிர்ந்தளித்தலில் பயன்படுத்தப்படும் பொது சட்டங்கள் மற்றும் விதிகள்.

## பொது சட்டங்கள் / சட்டத் தொகுப்புகள் / விதிகள்

1. இந்திய அமைப்புச் சட்டம்
2. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 (திருத்தம் 2002)
3. நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் 1987
4. தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு குழு விதிகள் 1988
5. பொருட்கள் விற்பனைச் சட்டம் – 1930
6. கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டம் – 1980
7. பொட்டலப் பொருட்கள் ஒழுங்குமுறை ஆணை – 1975
8. மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் – 1993
9. மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் – 1955
10. தண்ணீர் (பாதுகாப்பு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு) சட்டம் – 1974
11. தடையுறுத்தப்பட்ட / வரையறைப்படுத்தும் வணிகப் பழக்கச் சட்டம்–1969
12. உணவு கலப்பட தடுப்புச் சட்டம் – 1954
13. மருந்து மற்றும் மாயாஜால நோய் நீக்கிகள் மற்றும் ஆட்சேபத்திற்குரிய விளம்பரங்கள் சட்டம் – 1954
14. தாய்ப்பால் மற்றும் உணவு பால் புட்டி மற்றும் குழந்தைகள் உணவு (வரண்முறைச்) சட்டம் – 1992
15. இந்திய தரநிர்ணயச் சட்டம் – 1986

மேற்கூறிய சட்டங்கள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. நுகர்வோரே பொறுப்பு என்பதையும் வலியுறுத்தும் விதமாக நுகர்வோர் குறிய இச்சட்டங்கள் அனைவரும் விழிப்புடன் இருக்க வழிவகுத்துள்ளது.

## நுகர்வோர் யார் என்பதன் விளக்கம்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986இன் படி பகுதி 2 (1) (டி) பிரிவின்படி பணம் கொடுத்து ஒரு பொருளையோ, பணியையோ தன் சொந்த உபயோகத்திற்காக பெறுபவர் வாங்குபவர் அவர்கள் நுகர்வோர்கள் ஆவர்.

வாங்கிய பொருளையோ, சேவையையோ, பணியையோ, வணிக நோக்கத்துடன் பெறும் நபர் நுகர்வோராக இருக்க முடியாது மற்றும் தனது சுயவேலைவாய்ப்பிற்காக அல்லது தனது வாழ்வின் ஆதாரத்திற்காக வாங்கியிருப்பின் அவர் நுகர்வோராகவே கருதப்படுவார்.

1. பணம் கொடுத்து பொருள் வாங்குகிறவர் நுகர்வோர்

2. பணம் கொடுத்து சேவையை வாங்குகிறவர் நுகர்வோர்

3. பொருளுக்கு விலை கொடுக்கப்பட்டிருந்தால், பொருளை ஆள்பவர் நுகர்வோர்.

4. பணம் கொடுத்து சேவையை அனுபவிப்பவர் நுகர்வோர், சுருங்கச் சொல்ல வேண்டுமானால், பொருள் சேவை இரண்டிற்கும் பணம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

**தரமற்ற பொருள் :**

சிறிய (அல்லது) பெரிய குறைபாடு முழுமை பெறாத தரக்குறைவான, எடை குறைவான, இந்திய பொருட் பாதுகாப்பு சட்டங்களுக்கு உட்படாததான பொருட்கள் பொதுவாக ஓர் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரை பொருட்களுக்கு உத்தரவாதம் அவைகளின் தரத்திற்கு கொடுக்கப்படுகிறது தரக்குறைவு கண்டால் அது தரமற்றப் பொருள் வரிசையில் சேர்க்கப்படும்.

இதில், மருத்துவம், வாகனம், தொலைபேசி, மொபைல் போன், காப்பீடு, இன்சூரன்ஸ், மின்சாரம், தங்க நகைகள், மருத்துவமனைகள், கல்வி சம்பந்தப்பட்டவை, போக்குவரத்து பயணிகளுக்கு, இல்லறப் பொருட்கள், கடன் அட்டை ஏ.டி.எம். வங்கிகள், ரேசன் கார்டு சம்பந்தப்பட்ட பொருட்கள் சமையல் எரிவாயு சிலிண்டர், அனைத்தும் தரக்குறைவாகவும் சேவைக் குறைபாடுகள் இருந்தாலும் சேர்க்கப்படும். இந்த மாதிரியான குறைபாடுகள் இருந்தால் மாவட்ட, மாநில மற்றும் தேசீய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் புகார் செய்யலாம்.

## எங்கே புகாரைப் பதிவு செய்வது:

நீங்கள் ஒரு பொருளை வாங்கிய அல்லது ஒரு சேவையைப் பெற்ற மாவட்டத்தில் அல்லது எதிர்தரப்பினர் எல்லோருமோ அல்லது ஒருவரோ / வசிக்கும் / தொழில் செய்யும் அல்லது பொருள் / சேவை அளித்த எதிர்தரப்பினரின் கிளை அலுவலகம் அமைந்துள்ளது. மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் (மாவட்ட நுகர்வோர் குறைதீர் நீதிமன்றம்) அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றங்களில் நுகர்வோர் குறைதீர் (நீதி) மன்றம் செயல்படுகிறது உங்கள் புகாரைப் பதிவு செய்யலாம்.

நீங்கள் கோரும் மொத்த ஈட்டுத் தொகை ரூ. (20,00,000/-) 20 இலட்சத்துக்குள் இருந்தால் மாவட்ட நுகர்வோர் குறைதீர் (நீதி) மன்றத்தில் புகார் செய்ய வேண்டும். அந்த தொகை ரூ.20 இலட்சத்துக்கு

மேல் ரூ.(1 கோடிக்குள்) ஒரு கோடிக்குள் இருந்தால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் புகார் பதிவு செய்ய வேண்டும். அந்த தொகை ரூ. ஒரு கோடிக்கும் மேலானால் உங்கள் புகாரைப் புதுடில்லியில் உள்ள தேசீய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும். மேலும் எந்த நிலையிலும் நுகர்வோருக்கு நீதி கிடைக்காத நிலையில் அவர் உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தினை அணுகலாம்.

## புகார் செய்வது எப்படி

உங்கள் புகாருக்கு உரிய விளைவு ஏற்பட வேண்டுமென்றால் நீங்கள் சரியான முறையைப் பின்பற்றிப் புகார் செய்வது நல்லது.

புகார் செய்ய வேண்டிய அளவுக்கு நியாயமான குறையோ அல்லது இழப்போ சேவைக் குறைபாடோ உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் முதலில் எதிர்தரப்புக்கு நீங்கள் யாருக்கு எதிராகப் புகார் செய்ய இருக்கிறீர்களோ, அவர் எதிர்தரப்பு என்று குறிப்பிடுவர். எழுத்து மூலம் ஒரு கடிதம் எழுதி நீங்கள் அவரிடமிருந்து வாங்கிய பொருளில் அல்லது பெற்ற சேவையில் கண்ட உங்கள் குறையை விவரமாக தெரிவித்து அதற்கு நீங்கள் விரும்பும் பரிகாரம் என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டும் அக்கடிதம் அவரை அடைந்ததற்கான அத்தாட்சி தேவை (பதிவுத் தபால் / நகலில் அவர் கையெழுத்து)

உங்கள் புகார் சம்பந்தப்பட்ட எல்லாத் தகவல்களையும் (கடிதம் மூலமாகவோ இமெயில் மூலமாகவோ அனுப்பிய கடித நகல்கள் மற்றும் ஆதாரங்களையும் ஒன்றாய்த் திரட்டுகள் ஆதாரங்கள் என்பது நீங்கள் பொருளை வாங்கியதை உறுதி செய்யும் பால் அல்லது ரசீது பொருளின் தன்மை பற்றி விளக்கி வெளியிடப்பட்ட விளம்பரத்தாள் அல்லது புத்தகம் முன் மதிப்பீடு கொட்டேசன் போன்றவையாகும் விரைவாக புகார் செய்யுங்கள். உங்கள் கடிதத்தில் எதிர்தரப்பு செயல்படுவதற்கு நியாயமான கால அவகாசம் (சுமார் 15 நாட்கள்) கொடுங்கள்.

குறிப்பு : அனைத்து மூல பத்திரங்களையும் (Originals of Bills Receipts Brochures etc) ஒரு கோப்பாக வைத்திருங்கள் அவைகளை நீதிமன்றம் உத்தரவின்றி வேறு எவரிடமும் கொடுக்காதீர்கள். தேவைப்படும் போது எல்லாம் (ஜெராக்ஸ்) நகல்களையே பயன்படுத்துங்கள்.

## புகார் செய்வதற்கான கால வரையறை :

நீங்கள் ஆதாரமாகக் கருதப்படும் எதிர்தரப்பின் குற்றத்தை ஒப்புக் கொண்ட கடிதம் அறிவிப்பு பில், ரசீது போன்றவற்றில் எது தேதி வாரியாகக் கடைசியில் வருகிறதோ, அதனுடைய தேதியில் இருந்து இரண்டு வருடங்களுக்குள் புகாரைப் பதிவு செய்ய வேண்டும். பிரமாணவாக்கு மூலம் கூடமுத்திரைத் தாளில் இருக்க

புகாரை நுகர்வோரோ அல்லது பிரதிநிதியோ (வழக்கறிஞரே) நேரில் கொடுக்கலாம். நுகர்வோர் நீதிமன்றத்தின் உறுப்பினர் மற்றும் நீங்கள் கொடுக்கும் எதிர் தரப்பினர் ஒவ்வொருவர்க்கும் ஒரு நகல் தேவைப்படும்.

## மேல்முறையீடுகள் செய்வதற்கான கால வரையறைகள்

1. மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் (தீர்ப்பை நீங்கள் பெற்ற நாளில் இருந்து) 30 நாட்களுக்குள்.

2. மாநில நுகர்வோர் குறைதீர்வு (நீதி) ஆணையத்தின் தீர்ப்புக்கு எதிராக தேசீய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் (தீர்ப்பு பெற்ற நாளில் இருந்து) 30 நாட்கள்.

3. தேசிய நுகர்வோர் குறைதீர்வு (நீதி) ஆணையத்தின் தீர்ப்புக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் (தீர்ப்பு பெற்ற நாளில் இருந்து) 30 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்தல் வேண்டும்.

மேல் முறையீடு செய்ய வேண்டுமானால் முறையீட்டுடன் வைப்புத் தொகையையும் செலுத்த வேண்டும். மாநில ஆணையத்தில் இது மாவட்டம் அளித்த தீர்ப்புத் தொகையில் பாதி ஆனால் இதன் உயர்வரம்பு ரூ. 25,000/-மும், தேசிய ஆணையத்தில் இது மாநில ஆணையம் அளித்த தீர்ப்புத் தொகையில் பாதி இதன் உயர்வரம்பு ரூ.35,000/-மும் உச்சநீதி மன்றத்தில் இது தேசிய ஆணையம் அளித்த தீர்ப்புத் தொகையில் பாதி ஆனால் இதன் உயர்வரம்பு ரூ. 50,000/-மும் புகாரைப் பதிவு செய்யும் முறையில் எந்த மாற்றமும் இல்லை. என்னும் உங்கள் விண்ணப்பத்துடன் கீழ் நீதிமன்றத்தின் அசல் உத்தரவை (Original) இணைத்து, என்ன காரணத்திற்காக நீங்கள் அதை எதிர்க்கீறீர்கள் என்பதை தெளிவாகச் சொல்ல வேண்டும்.

## நுகர்வோர் பாதுகாப்பு குழு

**1. மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழு**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986இன் கீழ் வரும் விதிக்கு உட்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகவும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரை உறுப்பினர் செயலராகவும் மாட்டத்துக்குள் நுகர்வோர் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அரசுத்துறை அலுவலர்களையும், உறுப்பினர்களாக கொண்டுள்ளது. இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட்டு நுகர்வோர் பிரச்சனைகள் தொடர்பாக வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் (அரசு ஆணை எண். 616 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 05.11.93)

**2. மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழு**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986, பிரிவு 7-இன் படி மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழுவிற்கு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் அமைச்சர் அவர்கள் இதன் தலைவராகவும், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் மேலாளர் அவர்கள் இதன் உறுப்பினர் செயலராகவும் உள்ளனர். அரசு மட்டத்தில் நுகர்வோர் தொடர்புடைய பிரச்சனைகளை இக்குழு கவனிக்கிறது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986இன் படி 6(ஏ) முதல் 6 (பிப்) வரையில் குறிப்பிட்டுள்ளவாறு நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் விதமாக இக்குழு செயல்படுகிறது.

**3. எவ்வாறு புகாரினை பதிவு செய்வது**

இழப்பு ஏற்பட்ட இரண்டு வருடங்களுக்குள்ளாக புகாரினை செய்யப்பட வேண்டும். முத்திரைத்தாளில் புகாரினை பதிவு செய்ய வேண்டியதில்லை புகாரை நேரிடையாகவோ அல்லது சான்றிதளிக்கப்பட்ட நபர் மூலமாகவோ (வழக்கறிஞர்) அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ குறைதீர்மன்றம் அல்லது ஆணையத்திற்கு அனுப்பலாம். வழக்கறிஞரை வைத்துக் கொள்ள வேண்டியது நுகர்வோர் மற்றும் எதிர்தரப்பினரை பொறுத்தே அமைத்துக் கொள்ளலாம். புகார் மனுவானது பின்வரும் தகவல்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

1. புகார்தாரரின் பெயர் மற்றும் முழுமுகவரி குறித்து விவரங்கள்.

2. எதிர்மனுதாரர் / மனுதாரர்களின் பெயர் மற்றும் முழு முகவரி மற்றும் அவர்கள் குறித்த விவரம்.

3. பொருள் அல்லது சேவையைப் பயன்படுத்தி தேதி குறித்த விவரங்கள்.

4. பொருள் அல்லது சேவை பயன்பாடு தொடர்பாக செலுத்திய தொகை விபரம்

5. வாங்கிய பொருட்களின் எண்ணிக்கை அல்லது பயன்படுத்திய சேவையின் விவரங்கள்

6. புகாரின் தன்மை எத்தகையது அதாவது நேர்மையற்ற வணிக முறை / குறை பாடுடைய பொருள் / குறை பாடுடைய சேவை அதிக விலை போன்ற விவரங்கள் புகார் மனுவில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

7. (பில்) / ரசீதுகளின் நகல் விவரங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றினைத் தவறாது குறிப்பிட வேண்டும்.

8. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் கோரப்படும் நஷ்ட ஈட்டின் விவரம் வேண்டும்.

# நுகர்வோர் நீதிமன்றத்தில் மனுச் செய்வது எப்படி

## மாதிரி படிவம்

**நுகர்வோர் புகார் மனு**

மதிப்பிற்குரிய தேசிய, மாநில, மாவட்ட நுகர்வோர் குறைதீர்ப்பு கமிசன் அமைப்பு (நகரத்தின் பெயர்) நுகர்வோர் காப்புச் சட்டம் 1986 (பெயர் மற்றும் முழு முகவரி)

மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி : (பெயர் மற்றும் முழுமுகவரி) :

எதிர் பிரதிவாதியின் பெயர், முகவரி :

**முன்னுரை :**

புகார்தாரர் (மனுதாரர்) தங்களுடைய பெயர், இருப்பிடம் மற்றும் செய்யும் தொழில் பற்றி சுருக்கமான விபரத்தைக் குறிப்பிடவேண்டும். மற்றும் பிரதிவாதியின் பெயர், முகவரி, எந்த வகையில் மனுதாரரை பாதிப்பு அடையச் செய்தார் என்பது பற்றிய சுருக்கமான குறிப்புகள் :

**பாதிப்பு பற்றிய – விளக்கம் :**

எந்த வகையான பரிவர்த்தனையில் பிரதிவாதி, மனுதாரரை பாதிப்பு அடையச் செய்திட்டார் என்ற விளக்கம் மேலும் பாதிப்பு பற்றிய மதிப்பீடு விபரங்கள் :

எந்த வகையான விளம்பரங்கள் கொடுத்து பிரதிவாதி ஏமாற்றினார் என்பது பற்றிய விபரங்கள் :

**பரிவர்த்தனையின் முழு விபரங்கள் :**

- வாங்கிய பொருளின் விலை விபரங்கள்
- பணம் செலுத்தியது சம்பந்தமாக முழு ஆதாரங்கள்
- பணம் கொடுத்த தேதி பணம் கொடுத்த விதம் (காசோலை / பணமாக)

**புகாரின் விபரங்கள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள புகார்களில் தங்களுக்கு தேவையானவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்

1. ஏமாற்று விளம்பரங்கள்
2. பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து ஏமாற்றுதல்.
3. விற்பனைக்குப் பிறகு சரியான கவனிப்பின்றியும் கொடுத்த வாக்குறுதியின்படி உத்தரவாதத்திற்கு பொறுப்பு ஏற்காமலும் இருத்தல்.
4. வாதியை பிரதிவாதி மிரட்டுவது
5. பணம் கட்டிய பிறகு பொருளைக் கொடுக்காதிருத்தல்
6. கூடுதல் விலையைப் பெற்று ஏமாற்றுதல்
7. மேலே குறிப்பிட்ட காரணங்கள் இன்றி வேறு பாதிப்புகள் (இருந்தால்)

**ஆதாரங்கள் :**

- பிரதிவாதியின் பொய்யான விளம்பரங்கள் அல்லது வாக்குறுதிகள் சம்பந்தப்பட்ட ஆதாரங்களின் நகல் தொகுப்பு
- பணத்தொகை செலுத்தியதற்குரிய ரசீதின் நகல்
- பிரதிவாதி அளித்த ஒப்பந்த நகல் / வங்கியில் இருந்த திருப்பிய காசோலை / பதில் கடிதங்களின் நகல்

**புகார் மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நீதிமன்றம் (தொகையின் அடிப்படையில்)**

1. நஷ்ட ஈட்டுத் தொகை ரூ. 20 லட்சத்திற்கு குறைவாக இருந்தால் : மாவட்ட நுகர்வோர் குறைதீர்ப்பு நீதிமன்றம்
2. நஷ்ட ஈட்டுத்தொகை ஒரு கோடி ரூபாய்க்கு கீழே 20 லட்சத்திற்கு மேல் இருந்தால் : மாநில நுகர்வோர் குறை தீர்வு ஆணையம்.
3. நஷ்ட ஈட்டுத் தொகை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால் : தேசிய நுகர்வோர் குறை தீர்வு ஆணையம்.

## மனுவில் குறிப்பிடவேண்டிய கோரிக்கைகள்

- நஷ்ட ஈட்டுத்தொகையின் விபரம்
- பாதிப்பு ஏற்படுத்திய பிரதிவாதிக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனை
- வேறு ஏதாவது முக்கிய தகவல் (இருந்தால்)

## உறுதிமொழி

நான் (பெயர்) ................ முகவரி : .............. யில் வசிக்கிறேன் மாண்புமிகு நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள புகாரில் உள்ள அனைத்து தகவல்களும், ஆதாரங்களும், என்னுடைய மனசாட்சிக்கு உட்பட்டு உண்மை என உறுதி அளிக்கிறேன்.

(மனுதாரரின் கையொப்பம்)

## நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க

1. புகார் மனு
2. அபிவிட் (அளிக்கப்படும் அபிடவிட் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும்)
3. ஆதாரங்கள்          4. வக்காலத்து
5. தடை உத்தரவு பற்றிமனு (தேவைப்பட்டால்)
6. தாமதத்திற்குரிய காரணம் (தேவைப்பட்டால்)

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களிலும் தெளிவாக பக்க எண்கள் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும். நுகர்வோர் குறைதீர்ப்பு நீதிமன்றத்தில் உரிய கட்டணத்துடன் புகார் மனுவைச் சமர்ப்பித்திடவேண்டும்.

## நீதிமன்ற கட்டண விபரங்கள்

மத்திய அரசு Consumer Protection Rule 1987 (Section 12(2) of the CPA 1987) பிரிவில் கொண்டு வந்துள்ள திருத்தத்தின்படி கட்டண விபரங்கள்

## கட்டண விபரங்கள்

| மாவட்ட நுகர்வோர் குறைதீர்வு (நீதி) மன்றம் (10.02.2015) பொருளின் மதிப்பு மற்றும் நஷ்ட ஈட்டுத்தொகை | குறைதீர்வு (நீதி) மன்ற கட்டணம் |
|---|---|
| ரூபாய் 1 லட்சத்திற்கு குறைவாக | ரூபாய். 100/- |
| ரூபாய் 1 லட்சத்திற்கு மேல் அல்லது 5 லட்சத்திற்கு குறைவாக | ரூபாய்.200/- |
| ரூபாய் 5 லட்சத்திற்கு மேல் ரூ. 10 லட்சத்திற்கு குறைவாக | ரூபாய்.400/- |
| ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் | ரூபாய்.500/- |

மேலே குறிப்பிட்ட நீதிமன்ற கட்டணத்தொகையை புகார் மனுவுடன் சமர்ப்பித்திட வேண்டும் **President Consumer Dispute Redressal Forum** (மாவட்டத்தின் பெயர்) என்ற பெயரில் தேசிய வங்கியில் டிராப்டாக (டி.டி.) எடுத்து தபால் நிலையத்தில் போஸ்டல் ஆர்டர் நீதிமன்றத்தில் செலுத்திடவேண்டும்.

(ரிஜிஸ்ட்ரார்) மாநில நுகர்வோர் குறைதீர்வு ஆணையம் அல்லது தபால் நிலையத்தில் போஸ்டல் ஆர்டர் (10.02.2015 முதல்)

| | |
|---|---|
| ரூபாய் 20 லட்சத்திற்குமேல் மற்றும் ரூபாய் 50 லட்சத்திற்கு கீழ் | ரூபாய் 2000/- |
| ரூபாய் 50 லட்சத்திற்குமேல் ரூபாய் 1 கோடிக்கு கீழ் | ரூபாய் 4000/- |

**Registrar State Consumer Dispute Redressal Commission** (மாநிலத்தின் பெயர்) என்ற பெயரில் தேசிய வங்கியில் டிராப்டாக (டி.டி.) தபால்நிலையத்தில் போஸ்டல் ஆர்டர் எடுத்து புகார் மனுவுடன் நீதிமன்றத்தில் செலுத்திட வேண்டும்.

தேசிய நுகர்வோர் குறைதீர்ப்பு நீதிமன்றம் (10.02.2015இல் இருந்து)

| | |
|---|---|
| ரூபாய் 1 கோடிக்கு மேல் | ரூபாய் 5000/- |

நீதிமன்ற கட்டணத்தை National Consumer Redressal Commission என்ற பெயரில் தேசிய வங்கியில் டிராப்டாக (டி.டி.) தபால் நிலையத்தில் போஸ்டல் ஆர்டர் எடுத்து புகார் மனுவுடன் சமர்ப்பித்திட வேண்டும்.

நுகர்வோர் (உங்களை) பற்றி நன்கு படித்து தெரிந்து இருப்பீர்கள் நுகர்வோர் அனைவரும் விழித்து கொள்ளுங்கள் குறைவு / சேவை குறைபாடு இருந்தால் உடனே அணுகுங்கள் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தினை (நுகர்வோர் நீதிமன்றத்தினை) உங்கள் ஊரில் உள்ள நீதி மன்றங்களில் நுகர்வோர் குறைதீர் (நீதி) மன்றம் செயல்படுகிறது.

**நல்லதையே தயாரியுங்கள் !** **நல்லதையே வாங்குங்கள் !!**

**நல்லதையே விற்பனை செய்யுங்கள் !** **நல்லதே நடக்கட்டும் !!**

**எல்லா மக்களும் நல்ல வளமும், நலமும் பெற்று மிகச் சிறப்பாக வாழ வேண்டும். சட்டத்தின் முன் மக்கள் அனைவரும் சமம் இதில் ஜாதிமத பேதமில்லை.**

**ஆடம்பர நுகர்வைத் தவிர்ப்போம்!**
**நுகர்வோர் நலனைப் பாதுகாக்க ஒன்றாக**
**கைகோர்த்து குரல் கொடுப்போம்!!**



# எரிவாயு பாதுகாப்பு விழிப்புணர்வு

பெண்கள் தான் பொருட்களை அதிகம் வாங்குகிறார்கள். அவசர அவசரமாக பொருட்களை வாங்கும் போது குளறுபடி நடக்கவும் வாய்ப்பு இருக்கிறது. ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம் என ஈர்க்கும் வாசங்களை நம்பி எத்தனையோ பேர் ஏமாறுவது இன்றும் தொடர்கதையாக இருக்கிறது. எனவே பெண்களுக்குக் கூடுதல் பொறுப்பும், விழிப்புணர்வும் தேவை.

**கேஸ் சிலிண்டர்(ISI) :**

கேஸ் இணைப்புப் பெறும் போது அது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமா என்பதை முதலில் உறுதி செய்து கொண்டு பிறகு பதிவு செய்யுங்கள். சிலிண்டர் சப்ளை செய்ய வருபவர்கள் எடை போடும் கருவியை கையோடு எடுத்து வர வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அதனால் சிலிண்டர் கொண்டு வருபவர்களிடம் “எடை போட்டுத்தான் வாங்குவேன்” என்று உறுதியாகச் சொல்லி விடுங்கள். சீல் உடைக்கப்பட்டு, எடை குறைவாக இருப்பது தெரிந்தால், உடனே நுகர்வோருக்கான அமைப்பில் புகார் தரலாம். சிலிண்டர் நிறுவனம் வழங்கிய ப்ளூ புக் பதிவேட்டில் உடனுக்குடன் எழுதி அப்டேட் செய்து கொள்ளங்கள். வருடத்துக்கு 9 சிலிண்டர்கள் சரியான தேதியில் டெலிவரி செய்யப்பட்ட தகவல் அந்தப் புத்தகத்தில் இருக்க வேண்டும். சிலிண்டர் விலையை விட அதிகமாக பணம் தர வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டால் உடனே கேஸ் ஏஜென்சிக்குப் புகார் தெரிவிக்கலாம்.

**மளிகைப் பொருட்கள் (AGMARK):**

இலவசம், டிஸ்கவுண்ட், ஆஃபர் இருக்கிறதா என்று பார்ப்பதை விட, பொருளின் தரம் சரியாக இருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க வேண்டும். ஸ்நாக்ஸ், ஜூஸ், பிரெட் போன்றவற்றில் தயாரிக்கப்பட்ட தேதியையும், எக்ஸ்பைரி தினத்தையும் உற்று கவனித்து சரியாக இருந்தால் மட்டுமே வாங்க வேண்டும். எந்த விபரமும் இல்லாத வெறும் பிளாஸ்டிக் கவரில் அடைத்து விற்கப்படும் பொருட்களை வாங்கி பணத்தை விரயமாக்காதீர்கள். அவை உடலுக்கும் உகந்ததல்ல. அன்றாடம் உபயோகிக்கும் ஷாம்பு, சோப்பு, பேஸ்ட் பொருட்களுக்கும் எக்ஸ்பைரி தேதி அவசியம். மளிகைப் பொருட்களில் கலப்படம் இருப்பது தெரிந்தால் உடனே நுகர்வோர் அமைப்பில் புகார் செய்யுங்கள்.

**எலெக்ட்ரானிக்ஸ் (ISI) :**

எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் வாங்கும் பொழுது பார்ப்பதற்கு புத்தம் புதுசாக, எந்த சேதாரமும் இல்லாமல் கடையில் இருக்கும். ஆனால் வீட்டில் டெலிவரி செய்த பிறகு தான் அதில் பிரச்சனை இருப்பது தெரிய வரும். கடையில் இருந்து டெலிவரிக்கு கொண்டு வரும் நபர், பொருள் சரியாக இருக்கிறதா என்பதை முழுப் பரிசோதனை செய்துவிட்டு கொண்டு வருவது

நல்லது. பழுது இருந்தால் வந்தவர்களிடமே திரும்ப ஒப்படைப்பத்து விடுங்கள்.

**அழகுசாதனப் பொருட்கள் (Cosmetics) :**

மலிவு விலையில் கிடைக்கும் அழகு சாதனப் பொருட்களால் அலர்ஜி, தோலில் பிரச்சனை போன்றவை வந்து அவஸ்தைப்பட வேண்டியிருக்கும். அதனால் விலை குறைவான ஒப்பனைப் பொருட்களை வாங்குவதை விட, தரமான பிராண்டட் பொருட்களையே வாங்குங்கள். அந்த ஒப்பனைப் பொருட்கள் உங்கள் சருமத்திற்கு ஏற்றவைதானா என்பதையும் உறுதி செய்து பயன்படுத்துங்கள். சானிட்டரி நாப்கின் வாங்கும் போது கவனம் தேவை.

**பட்டுப்புடவை (Silk Mark) :**

பெண்கள் அதிகம் ஏமாந்து போவது பட்டுப்புடவை வாங்குவதில்தான். தரம் இல்லாத பட்டுப்புடவையை வாங்கி விட்டு பிறகு அவதிப்படுவார்கள். எனவே புடவை வாங்குவதில் அதிக கவனம் தேவை. சில்க் மார்க் முத்திரை இருக்கிறதா என்பதை பரிசோதித்து, சுருக்கம் ஏற்படாத சாயம் போகாத துணிகளா என்பதையும் உரிய முறையில் சோதித்து பார்த்த பிறகே பட்டுப்புடவை வாங்க வேண்டும்.

**ஆன்லைன் (Online) :**

இருக்கும் இடத்திலிருந்து ஆர்டர் செய்தாலே வீடு தேடி வரும் என்கிற வசதியில் ஆன்லைன் ஷாப்பிங் மோகம் இன்றைய தலைமுறைக்கு அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாகவே பல தரம் இல்லாத பொருட்களை வாங்கி பணத்தையும் இழந்துவிடுகிறார்கள். ஒரு பொருளை வாங்குவதற்கு முன் இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் முகவரி, தொலைபேசி எண் சரியானவையா, நிறுவனம் நம்பகமானதா என்பதை சரிபார்த்து வாங்க வேண்டும். காஸ்மெடிக்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் பொருட்களை முடிந்த வரை நேரடியாக கடையில் சென்று வாங்குவது நல்லது. எங்களிடம் வரும் புகார்களில் 80 சகவிகிதத்திற்கும் அதிகமானவை ஆன்லைன் மோசடிகள்.

**கூடுதல் விலை (Extra Rate) :**

ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்ட், ஷாப்பிங் ஸ்டாண்ட், ஸாப்பிங் மால், தியேட்டர் ஆகிய இடங்களில் தண்ணீர் பாட்டில், ஸ்நாக்ஸ், குளிர்பானங்கள் போன்றவற்றை MRP விலையிலிருந்து கூடுதல் விலைக்கு விற்பார்கள். விலையை அதிகமாக இருக்கிறதே என்று கேட்டால் இங்கு இப்படித்தான் என்று அலட்சியமாக பதில் சொல்வார்கள். அப்படி கூடுதல் விலைக்கு விற்பது தவறு, இந்த முறைக்கேட்டையும், நுகர்வோர் அமைப்பின் கவனத்திற்கு கொண்டு போகலாம். முறையான ரசீது (Bill) அவசியம் .

வாடிக்கையாளர்கள் தங்கள் பிரச்சனைகளை நுகர்வோர் அமைப்புகளில் புகார் செய்யலாம். உரிய முறையில் புகார் செய்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடர்புக்கு : **98650 91526, 99525 33887**

## LPG-ஐ பயன்படுத்தும்போது மனதில்கொள்ள வேண்டிய வழிகள்

எப்போதுமே சிலிண்டரை
நிமிர்த்தி வைக்கவும்.



கேஸ் ஸ்டவ் -வை சிலிண்டருக்கு மேல்
6 அங்குலம், உயர்த்தி சமதளத்தில்
வைக்கவும். எப்போதும் நின்றுகொண்டே
சமைக்கவும்.



பலத்த காற்று வீசும் பக்கத்தில்
கேஸ்டவ்-வை வைக்காதீர்கள்.



சமையலறையில் கேஸ் சிலிண்டரைத்
தவிர வேறு எந்த எரியும் பொருளை
வைக்காதீர்கள்.



கேஸ் ஸ்டவ் -வை திறக்கும் முன்பே
தீக்குச்சியை ஏற்றவும்.




சமைக்கும்போது வேறு வேலைகளைத்
தவிருங்கள். ஸ்டவ் அருகிலேயே
இருங்கள், சமைக்கும்போது எப்போதுமே
காட்டன் ஏப்ரனை அணிந்திடுங்கள்.



எப்போதுமே சமைக்கும் பாத்திரத்தை
கிடுக்கி கொண்டு பிடித்திடுங்கள்,
துணியை பயன்படுத்துவதை தவிருங்கள்.



தூங்கும் போதோ அல்லது வெளியில்
செல்லும்போதோ ரெகுலேட்டரை
ஸ்விட்ச் ஆஃப் செய்யுங்கள்.




சேஃப்
ஹோஸ்-ஐ
5 ஆண்டுகளுக்கு
ஒருமுறை
மாற்றவும். கேஸ்
ஸ்டவ்-வை
நீங்களே பழுது
பார்ப்பதை
நிறுத்தவும்.



## காற்றில் கேஸ் வாசனை வந்தால் எடுக்கவேண்டிய வழிமுறைகள்

காற்றில் LPG வாசனை வந்தால் மின் ஸ்விட்சுகள்,
லைட்டர், தீக்குச்சிகள் ஆகியவற்றை ஏற்றாதீர்கள்.
சன்னல்களையும் கதவுகளையும்
உடனே திறந்திடுங்கள்.



கேஸ் கசிவது தெரிந்தால் பாதுகாப்பு
கேப்-பை போடுங்கள். சிலிண்டரை
திறந்த வெளியில் வைத்துவிட்டு
விநியோகஸ்தரை நாடவும்.




கேஸ் கசிவு இருந்தால் உங்கள் உள்ளூர்
கேஸ் விநியோகஸ்தரையோ அல்லது
1906 ஹெல்ப் லைனை அழைக்கவும்.




அனைத்து வகையான **LPG** குறித்த சந்தேகங்களுக்கும் புகார்களுக்கும்
**1800 2333 555** என்ற டோல்ப்ரீ எண்ணை அழைக்கவும்

**நாம் சரியான மற்றும் பாதுகாப்பான வழிமுறைகள் மூலம்
LPG-ன் முழு பயனைப் பெற்றிடுவோம்.**

इंडियनऑयल
IndianOil

Bharat
Petroleum

हिन्दुस्तान पेट्रोलियम
HP

# சமூக நலத்துறை மதுரை மாவட்டம்

## மதுரை மாவட்ட சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

## மாண்புமிகு தமிழக முதல்வரின் ஏழைப் பெண்களுக்கான திருமண நிதியுதவி மற்றும் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்

### 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் :

| பயன்பெறுவதற்கான தகுதிகள் | பயன்கள் |
|---|---|
| 1. மணப்பெண் 10ஆம் வகுப்பு பள்ளியில் படித்து அரசுத்தேர்வு எழுதியிருக்க வேண்டும்.<br>2. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 72,000-க்குள் இருக்க வேண்டும்.<br>3. திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் 40 நாட்களிலிருந்து திருமணம் நடைபெறும் முதல் நாள் வரையிலும் விண்ணப்பிக்கலாம்.<br>4. இணையதளம் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.<br>5. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை மணப்பெண்ணின் பெற்றோருக்கு வழங்கப்படுகிறது.<br>6. தனியார் தொலைத்தூரக் கல்வி மூலம் படித்து இருந்தால் 10ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும்.<br>7. பழங்குடியினராக இருந்தால் 5ஆவது படித்திருக்க வேண்டும்<br>8. ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கும் மட்டும் உதவித்தொகை வழங்கப்படும்.<br>9. திருமணத் தேதியன்று மணமகளுக்கு 18 வயதும், மணமகனுக்கு 21 வயது நிரம்பியிருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை. | 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு<br><br>ரூ. 25,000/- நிதி உதவி மற்றும்<br>8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்<br><br>பட்டம் / பட்டயப்படிப்பு :<br><br>ரூ. 50,000/- நிதிஉதவி மற்றும்<br>8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும் |

### 2. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் :

| பயன்பெறுவதற்கான தகுதிகள் | பயன்கள் |
|---|---|
| 1. மணமகளின் தாய் கணவரை இழந்து, மறுமணம் செய்யாதவராக இருத்தல் வேண்டும்.<br>2. திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் 40 நாட்களிலிருந்து, திருமணம் நடைபெறும் முதல் நாள் வரையிலும் விண்ணப்பிக்கலாம்.<br>3. இணையதளம் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.<br>4. ஆண்டு வருமானம் ரூ. 72.000-க்குள் இருக்க வேண்டும்<br>5. திருமணத் தேதியன்று மணமகளுக்கு 18 வயதும், மணமகனுக்கு 21 வயது நிரம்பியிருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.<br>6. விதவைத் தாயின் ஒரு பெண்ணுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும். | குறைந்தபட்ச கல்வி தகுதி கிடையாது.<br>எனினும் 12ம் வகுப்பு வரை படித்திருந்தால்:<br>ரூ. 25,000/- நிதி உதவி மற்றும்<br>8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.<br><br>பட்டம் / பட்டயப்படிப்பு :<br><br>ரூ. 50,000/- நிதி உதவி மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும். |

### 3. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் :

| பயன்பெறுவதற்கான தகுதிகள் | பயன்கள் |
|---|---|
| 1. தாய், தந்தை இருவரையும் இழந்த ஆதரவற்ற பெண்கள் மட்டும் இத்திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம்.<br>2. திருமணத் தேதியன்று மணமகளுக்கு 18 வயதும், மணமகனுக்கு 21 வயது நிரம்பியிருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.<br>3. திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் 40 நாட்களிலிருந்து, திருமணம் நடைபெறும் முதல் நாள் வரையிலும் விண்ணப்பிக்கலாம்.<br>4. இணையதளம் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.<br>5. சட்டமன்ற உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து ஆதரவற்றோர் சான்று பெற்று வழங்கலாம் அல்லது.<br>6. தாய் தந்தை இறப்புச் சான்று வழங்க வேண்டும். | குறைந்தபட்ச கல்வி தகுதி கிடையாது.<br>எனினும் 12ஆம் வகுப்பு வரை படித்திருந்தால்:<br>ரூ. 25,000/- நிதி உதவி மற்றும்<br>8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.<br><br>பட்டம் / பட்டயப்படிப்பு :<br><br>ரூ. 50,000/- நிதி உதவி மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும். |

### 4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம் :

| பயன்பெறுவதற்கான தகுதிகள் | பயன்கள் |
|---|---|
| 1. விதவைப் பெண்ணின் வயது திருமணத் தேதியன்று மணமகளின் குறைந்தபட்ச வயது 20 ஆக இருக்க வேண்டும். மணமகனின் அதிகபட்சம் 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>2. இத்திட்டத்தில் பயன்பெற வருமான வரம்பு கிடையாது.<br>3. திருமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்<br>4. இணையதளம் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்<br>5. மணமகனுக்கு முதல் திருமணமாக இருக்க வேண்டும். | குறைந்தபட்ச கல்வி தகுதி கிடையாது. எனினும் 12ஆம் வகுப்பு வரை படித்திருந்தால்: ரூ. 25,000/- நிதி உதவியில் ரூ. 15,000/- காசோலையும், ரூ. 10,000/- தேசிய சேமிப்பு பத்திரமாகவும் மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.<br>பட்டம் / பட்டயப்படிப்பு :<br>ரூ. 50,000/- நிதிஉதவியில் ரூ. 30,000/- காசோலையும், ரூ. 20,000/-க்கான தேசிய சேமிப்பு பத்திரமாகவும் மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும். |

### 5. முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் :

| பயன்பெறுவதற்கான தகுதிகள் | பயன்கள் |
|---|---|
| 1. இத்திட்டத்தில் பயன்பெற வருமான வரம்பு கிடையாது.<br>2. இருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.<br>3. திருமணம் முடிந்து 2 வருடத்திற்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.<br>4. குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.<br>**பிரிவு - 1.**<br>மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராக இருந்து பிற இனத்தவரை மணந்து கொண்டால் நிதியுதவி வழங்கப்படும்.<br>**பிரிவு - 2.**<br>மணமக்களில் ஒருவர் முற்பட்ட வகுப்பை சேர்ந்தவராகவும் மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருந்தால் நிதியுதவி வழங்கப்படும். | குறைந்தபட்ச கல்வி தகுதி கிடையாது. எனினும் 12ஆம் வகுப்பு வரை படித்திருந்தால் ரூ. 25,000/- நிதி உதவியில் ரூ. 15,000/- காசோலையும், ரூ. 10,000/- தேசிய சேமிப்பு பத்திரமாகவும் மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.<br>பட்டம் / பட்டயப்படிப்பு :<br>ரூ. 50,000/- நிதி உதவியில் ரூ. 30,000/- காசோலையும், ரூ. 20,000/-க்கான தேசிய சேமிப்பு பத்திரமாகவும் மற்றும் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும். |

### 6. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் :

| வ.எண். | திட்ட விவரம் | தகுதி | வழங்கப்படும் தொகை |
|---|---|---|---|
| 1 | திட்டம் - 1 | 1 பெண் குழந்தை மட்டும் | ரூ. 50,000/- |
| 2 | திட்டம் - 2 | 2 பெண் குழந்தை | ஒரு குழந்தைக்கு ரூ. 25,000/- வீதம் இரண்டு குழந்தைக்கு ரூ. 50,000/- |
| 3 | திட்டம் - 3 | 2-ஆவது பிரசவத்தில் 2 பெண் குழந்தை | ஒரு குழந்தைக்கு ரூ. 25,000/- வீதம் மூன்று குழந்தைக்கு ரூ. 75,000/- |

**திட்டத்தில் பயன்பெறுவதற்கான தகுதிகள் :**

1. 35 வயதுக்குள் பெற்றோரில் ஒருவர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்திருக்க வேண்டும்
2. குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும்
3. ஆண் குழந்தை இருக்கக் கூடாது. பின்னாளில் ஆண் குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளவும் கூடாது.
4. விண்ணப்பிக்கும் போது பெற்றோர் அல்லது அவர்களின் பெற்றோர்கள் தமிழகத்தில் பத்தாண்டுகள் வசித்தவராக இருத்தல் வேண்டும்.
5. திட்டம் 1-இன் கீழ் ஒரு பெண் குழந்தை மட்டும் இருப்பின் அக்குழந்தை பிறந்த மூன்று ஆண்டிற்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
6. திட்டம் 2-இன் கீழ் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் எனில், இரண்டாவது குழந்தை பிறந்த மூன்று ஆண்டிற்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

7. திட்டம் 3-இன் கீழ் இரண்டாவது பிரசவத்தில் இரட்டை பெண்குழந்தை பிறந்து இருந்தால், பிறகு மூன்று ஆண்டிற்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
8. ஆண்டு வருமானம்ரூ. 72,000/-க்குள் இருத்தல் வேண்டும்.

## 7. அன்னை சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் :

| பயன்பெறுவதற்கான தகுதிகள் | பயன்கள் |
|---|---|
| 1. விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் சமுதாயத்தில் நலிவடைந்த பெண்கள் ஆகியோருக்கு இச்சலுகை வழங்கப்படுகிறது.<br>2. வயது 20 முதல் 40 வயதுக்குள் இருக்க வேண்டும் (வயது சான்று தேவை)<br>3. ஆண்டு வருமானம் ரூ. 72,000/-க்குள் இருத்தல் வேண்டும்.<br>4. 6 மாத கால தையல் பயிற்சி சான்று பெற்றிருக்க வேண்டும்.<br>5. இருப்பிடச் சான்று, ஜாதிச்சான்று, கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் விதவைச்சான்று பெற்றிருக்க வேண்டும். | இத்திட்டத்தில் ஒரு இலவச தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. |

## 8. குழந்தை திருமண தடுப்புச் சட்டம் :

1. 18 வயது நிறைவடையாத பெண்ணுக்கும், 21 வயது நிறைவடையாத ஆணுக்கும் திருமணம் செய்து வைத்தால், குழந்தை திருமண தடுப்புச் சட்டம் 2006-இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இக்குற்றத்தில் ஈடுபட்ட தொடர்புடைய நபர்களுக்கு இரண்டு வருட கடுங்காவல் மற்றும் 1 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.
2. குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்த அழைக்க வேண்டிய தொலைபேசி எண் :
CHILD LINE 1098



# தமிழ்நாடு அரசு
# சமூகபாதுகாப்புத்துறை

ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,**
**மதுரை மாவட்டம்**

★ குழந்தைகள் இல்லங்களை இளைஞர்நீதி சட்டத்தின்படி முறைப்படுத்துதல்

★ பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல்

★ தத்தெடுப்பதற்கு வழிகாட்டுதல் (ளீபுயூபு)

★ குழந்தை கடத்தலைத் தடுத்தல்

★ குழந்தைகளுக்கான சட்டங்களை செயல்படுத்துதல்

★ தற்காலிக பராமரிப்பு, பிற்காப்பு பராமரிப்பு & நிதி உதவி வழங்குதல்

★ குழந்தை திருமணத்தை தடுத்தல்

★ குழந்தை தொழிலாளர் முறையை ஒழித்தல்

★ கல்வி இடைநிந்நலை தடுத்தல்

★ தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதி மற்றும் இல்லங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின்படி பதிவு செய்தல்

★ குழந்தை பிச்சை எடுத்தலை தடுத்தல்

குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பிற்கு தொடர்பு கொள்ளலாம்.

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு**
எண் : 91/94, அசோக் நகர் 3வது தெரு,
அஞ்சல் நகர், மதுரை மாவட்டம்.
போன் : 0432-2642300

# பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் 2012

**குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தாக்குதல் :**

*நவம்பர் 2012இல் நிறைவேற்றப்பட்ட பாலியல் குற்றங் களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழ் பாலியல் தாக்குதல் நான்கு விதமாக பிரிக்கப்பட்டுள்ளன. நான்கு விதமாக பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன,*

**“உட்செலுத்தும்” பாலியல் தாக்குதல் :**

(Penetrative sexual assault) *ஒருவர் தன்னுடைய பிறப்புறுப்பையோ அல்லது வேறெந்த உறுப்புகளையோ (விரல் மற்றும் பொருள்களையோ) உட்செலுத்துவதோ, உடலுறவு கொள்வதோ உட்செலுத்தும் பாலியல் தாக்குதல் எனப்படும்.*

**கடுமையான உட்செலுத்தும் பாலியல் தாக்குதல் :**

(Aggravated penetrative sexual assault) *காவல் துறை அலுவலர்கள், இராணுவ வீரர்கள், அரசு ஊழியர்கள், சிறைச் சாலை ஊழியர்கள், அரசு/தனியார் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவன ஊழியர்கள் இவர்களால் பிறப்புறுப்புகளை உட்செலுத்தி பாலியல் தாக்குதலுக்குண்டான செயல்களை மற்றும் பல்வேறு இதர செயல்பாடுகளும் (பிரிவு 5இன் கீழ்* a *முதல்* u *வரை) செய்தால் அது கடுமையான உட் செலுத்தும் பாலியல் தாக்குதல் ஆகும்.*

**பாலியல் தாக்குதல்** (Sexual Assault) :

*பாலியல் உள் நோக்கத்துடன் குழந்தைகளின் அந்தரங்க உறுப்புகளை தவறான நோக்கத்துடன் பிறப்புறுப்புகளை உட் செலுத்தாமல் அதனை தொடுவது, தான் மட்டுல்லாது குழந்தையையும் தொடச் செய்வது, பார்க்கச் செய்வது பாலியல் தாக்குதல் ஆகும்.*

**கடுமையான பாலியல் தாக்குதல்** (Aggravated Sexual Assault) :

*காவல்துறை அலுவலர்கள், இராணுவ வீரர்கள், அரசு ஊழியர்கள், சிறைச்சாலை ஊழியர்கள், அரசு / தனியார் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவன ஊழியர்கள் இவர்களால் பிறப்புறுப்புகளை உட் செலுத்தாமல் பாலியல் தாக்குதலுக்குண்டான செயல்களை மற்றும் பல்வேறு இதர செயல்பாடுகளும் (பிரிவு5ன் கீழ்* a *முதல்* u *வரை) செய்தால் கடுமையான பாலியல் தாக்குதல் எனப்படும்.*

*பாலியல் தொந்தரவு* (Sexual Harassment) *பாலியல் உள் நோக்கத்துடன் குழந்தையிடம் பேசுவது, படம் காட்டுவது, ஜாடை காட்டுவது, ஒலி எழுப்புவது, ஆபாசப் படமெடுக்கும்*

நோக்கத்துடன் பாலியல் தொந்தரவு செய்வது ஆகியன பாலியல் தொந்தரவு ஆகும்.

**யாரெல்லாம் பாதிக்கப்படுகின்றனர்?**

பெண் குழந்தைகள் மட்டுமல்லாது ஆண் குழந்தைகளும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

யாரால் பாதிக்கப்படுகின்றனர்?

- நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள்
- இரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினர் / தத்து எடுப்பவர்
- வளர்ப்பு பெற்றோர், ஒரே வீட்டில் வசிப்பவர்கள்.
- பகிர்வுடைய குடும்ப உறுப்பினர்கள்.
- குழந்தைப் பராமரிப்பு செய்யக்கூடியவர்கள் மற்றும் உரிமையாளர்கள்.
- கல்வி / மத / நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள்.
- தனியார் மற்றும் அரசு ஊழியர்கள்.
- காவல்துறை / இராணுவ மற்றும் பாதுகாப்பு வீரர்கள்.
- நம்பிக்கையானவர்கள், பக்கத்து வீட்டிலுள்ளவர்கள்.
- விளையாட்டுப் பயிற்சியாளர்கள்
- குழந்தைகளுடன் அன்றாடம் தொடர்பில் இருப்பவர்கள்
- முற்றிலும் அறிமுகமாகாத மற்றும் தெரியாத நபர்கள்.

**குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களிலிருந்து அவர்களை பாதுகாக்கும் பல்வேறு சட்டங்கள்**

- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் 2012.
- இளைஞர் நீதி (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) 2000, திருத்தப்பட்ட சட்டம் 2006.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும் பாலியல் குற்றங்களுக்கான பிரத்யேக சட்ட பிரிவுகள் உள்ளன. (உதாரணமாக பாலியல் பலாத்காரம் பிரிவு 354. பிரிவு 377.....)

**பாலியல் குற்றத்திலிருந்து குழந்தைகளை காப்பதற்கான சட்டம் 2012இன் முக்கிய அம்சங்கள்.**

- கடுமையான பாலியல் தாக்குதலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் சட்டப் பிரிவின் கீழ் பாலியல் குற்றங்களுக்கு ஏற்கனவே தண்டனைப் பெற்றவராகவோ அல்லது இக்குற்றங்களை புரிவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் நபர்களின் விபரங்கள் வெளிச்சத்திற்கு வரக்கூடும்.

- *ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கையில் கூறியுள்ளவாறே குழந்தையின் வயது வரம்பு மற்றும் ஆண், பெண் பாலின வேறுபாட்டிற்கான வரையறையை போலவே இச்சட்டத்திலும் கூறப்பட்டுள்ளது.*
- *பாலியல் குற்றங்கள் செய்வதற்கு தூண்டுவதோ, உடந்தையாக இருப்பதோ தண்டனைக்குரிய செயல்களாக இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.*
- *பல்வேறு விதமான பாலியல் துன்புறுத்தலுக்கு ஏற்றபடி கடுமையான தண்டனை பல்வேறு பிரிவுகளில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.*
- *குழந்தைக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் புகார் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் அலட்சியம் காட்டுவதற்கு பிரத்யேக தடை.*
- *இந்தியத் தண்டனைச் சட்டத்தில் விடுபட்ட பாலியல் கொடுமைகளுக்கான சட்டங்கள் இச்சட்டத்தின் மூலம் வலுப்படுத்தப்படுகிறது.*
- *குழந்தைகள் நேயமுள்ள மருத்துவ பரிசோதனை மற்றும் நீதிமன்ற செயல்முறைகள்.*
- *சிறப்பு சிறார் காவல் அலகு மற்றும் மாவட்ட அளவிலான மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலகின் முக்கிய பங்களிப்புகளை உறுதி செய்தல்.*
- *மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக உரை பெயர்ப்பாளர் மற்றும் நிபுணர்களை நியமிக்கும் பொழுது குழந்தைகளின் கருத்துகளை வெளி கொணர்வதற்கான உரிமைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துதல் வேண்டும்.*

**பாலியல் குற்றங்களுக்கான தண்டனைகள் :**

**உட் செலுத்தும் பாலியல் தாக்குதலுக்கான** (Penetrative Sexual assault) **தண்டனைகள் :**

*7 வருடத்திற்கும் குறையாத சிறைத் தண்டனை. அது ஆயுள் தண்டனையாக நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதம் விதிக்கப்படும். (பிரிவு 4)*

**கடுமையான உட் செலுத்தும் பாலியல் தாக்குதலுக்கான** (Aggravated penetrative sexaul assault) **தண்டனைகள் :**

*10 வருடத்துக்கு குறையாத கடுங்காவல் தண்டனை. அது ஆயுள் தண்டனையாக நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 6)*

**பாலியல் தாக்குதலுக்கான** (Sexual Assault) **தண்டனைகள் :**

*3 வருடத்திற்கு குறையாத சிறைத் தண்டனை. அது 5 வருடம்*

*வரை நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 8)*

**கடுமையான பாலியல் தாக்குதலுக்கான** (Aggravated Sexual Assault) **தண்டனைகள் :**

*5 வருடத்திற்கு குறையாத சிறைத் தண்டனை அது 7 வருடம் வரை நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 10)*

**பாலியல் தொந்தரவுக்கான** (Sexual Harassment) **தண்டனைகள் :**

*3 வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 12)*

**1. ஆபாசப் படம் எடுத்தலில்** (Pornographic Purpose) **குழந்தையை பயன்படுத்துவோருக்கான தண்டனைகள் :**

*5 வருடம் சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 14(1))*

*மேற்கூறிய குற்றத்துடன்* (Pornographic Purpose) *பிரிவு 3ல் கூறப்பட்டுள்ள குற்றத்தையும் செய்தால் 10 வருடம் குறையாத ஆயுள் தண்டனை வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படும் (பிரிவு 14 (2)*

*மேற்கூறிய குற்றத்துடன் பிரிவு 5இல் கூறப்பட்டுள்ள குற்றத்தையும் செய்து* (Pornographic Purpose), *தானே அப்பட செயல்பாடுகளில் நேரிடையாக பங்கேற்றால் அவருக்கு ஆயுள் தண்டனை வரையிலான கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும் (பிரிவு 14(3))*

**ஆபாசப் படங்களை** (Pornographic Purpose) **வியாபார நோக்கில் சேமித்து வைப்பதற்கான** (Storage) **தண்டனைகள் :**

*3 ஆண்டு சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் விதிக்கப்படும். (பிரிவு 15)*

*குற்றத்திற்கு உடந்தை / தூண்டுதலாக* (Abetment) *இருந்தால் செய்யப்பட்ட குற்றத்திற்கு என்ன தண்டனையோ அதே தண்டனை வழங்கப்படும். (பிரிவு 17)*

**குற்றம் புரிவதற்கு முயற்சி செய்தலுக்கான** (Attempt to Commit an offence) **தண்டனைகள் :**

*ஆயுள் தண்டனையில் பாதியோ அல்லது அக்குற்றத்திற்கு அதிகபட்ச சிறைத் தண்டனையில் பாதியோ அல்லது அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டும். (பிரிவு 18)*

*பிரிவு 19 மற்றும் 20இன் கூறப்பட்டுள்ள குற்றங்கள் நடந்தது குறித்து தகவல்களை அளிக்க தவறினால் ஆறுமாதம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்*

விதிக்கப்படும். (பிரிவு 21(1))

ஒரு நிறுவனத்தின் பணியாளர் மேற்கூறிய குற்றங்கள் செய்து அதை அந்நிறுவனத்தின் அதிகாரி தெரிவிக்காதிருந்தால் ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 21 (2))

மற்றும் பிரிவு 3,5,7,9இன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக குற்றமுறையீடு தவறாகச் செய்தாலும் (False complaint) தவறான தகவல் False information) அளித்தலுக்கான தண்டனைகள் ஆறு மாதம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். (பிரிவு 22(1))

தவறான தகவல் அளித்து (False information) அல்லது தவறான முறையீடு (False complainnt) செய்து குழந்தைக்கு பாதிப்பு இழைத்தலுக்கான தண்டனைகள் ஒரு வருடம் வரையிலான சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் (பிரிவு 22(3))

மற்றும் பிரிவு 23 (1) (2)இல் கீழ் கூறப்பட்டுள்ளவாறு செயல்படாது குழந்தை (Identity of a child) குறித்த தகவல் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டால் 6 மாதங்களுக்கு குறையாத ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். (பிரிவு 23(4))

**குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சம்பந்தப்பட்ட புகார்களை யாரிடம் கூறலாம்?**

- காவல்துறை
- சிறப்பு சிறார் காவல் அலகு
- பஞ்சாயத்துதலைவர், கிராம நிர்வாக அதிகாரி
- குழந்தைகள் நலக்குழு
- ஒன்றிய / கிராம அளவில் குழந்தைகள் பாதுகாப்பு குழு
- மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு



# குழந்தைத் திருமணம் தடுத்தல்

**குழந்தைத் திருமணம் என்றால் என்ன?**

பெண்ணைப் பொறுத்தமட்டில் 18 வயதும், ஆண்களைப் பொறுத்தமட்டில் 21 வயதும் நிறைவடையாத நிலையில் செய்யப்படும் திருமணம் குழந்தைத்திருமணம் ஆகும்.

**குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள்**

- சமூகத்திலும், குடும்பத்திலும் பெண்ணிற்கு உரிய இடம் அளிக்காதது.
- இன்றளவும் நீடிக்கும் வரதட்சணைக்கொடுமை.
- குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் உடல், மனம், உணர்வு ரீதியான பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாது இருத்தல்.
- கல்வி அறிவு மற்றும் பொது அறிவு தேவையான அளவு இல்லாமை.
- வறுமை
- தற்போதைய நவீன மயத்தின் காரணமாக வளர் இளம் பருவத்தில் இருக்கக்கூடிய ஆண், பெண் குழந்தைகளிடையே ஏற்படக்கூடிய இனக் கவர்ச்சி போன்ற பாலியல் ரீதியான விஷயங்கள் குறித்த தெளிவான புரிதல் இல்லாதது.
- சமூகத்தில் பெண் குழந்தைகளை திருமணம் செய்து கொடுக்க வேண்டுமே என்று சுமையாகக் கருதுவது.
- வறுமையின் நிமித்தம் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு சென்று வாழ்க்கை நடத்தும் நிலை.
- சமூகத்தில் பெண்களுக்கு ஆண்களினால் வரும் பாலியல் தொல்லையிலிருந்து திருமணமே பாதுகாப்பு என்ற போலியான நம்பிக்கை.
- பாலினம் சதவீதத்தில் சமமில்லா நிலை.

**குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் பின் விளைவுகள்**

- திருமணம் ஆனவுடன் கருவுறுதல் நிலை ஏற்படும் ஆனால் இளம் வயது என்பதால் கர்பப்பை முழுவளர்ச்சி அடையாததின் காரணமாக அடிக்கடி கருச்சிதைவு ஏற்பட அதிக வாய்ப்புண்டு.
- கருவுறுதல், கருச்சிதைவு மற்றும் கருக்கலைப்பு ஆகியன அடிக்கடி ஏற்படுவதால் சத்துக் குறைபாடு அதிகபட்சம் ஏற்படுகிறது.
- அப்படியே கருச்சிதைவு ஏற்படாமல் பிரசவித்தாலும் தாய், சேய் மரணம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

- அப்படியே மரணம் ஏற்படாத நிலையில், குழந்தைகள் எடைகுறைவாகவும், உடல், மனக் குறைபாடு உள்ள குழந்தையாகவும் பிறக்க வாய்ப்பு உண்டு.
- மேலும், தாய்க்கு இரத்த சோகை ஏற்படும். அதுமட்டுமல்லாமல் உடல் மற்றும் மனம் பாதிப்பு அடைவதால் பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.
- இதனால் சரியாக வேலை செய்ய இயலாத நிலையினால் வறுமைக்கு அடிகோலும்.
- இதனால் குடும்பத்தில், வேலைக்கு செல்ல இயலாததாகையால் பெண்கள் மீது பல்வேறு தாக்குதல் நடக்க வாய்ப்புள்ளது.
- எல்லாவற்றிற்கும் மேலாகப் படிக்கும் பருவத்தில் திருமணம் செய்வதால் கல்வி அறிவு தடைப்பட்டு தன்னம்பிக்கை குறைந்து அதனால் தன்னுடைய சொந்தக் குழந்தைகளையும் சரியாக படிக்க வைக்க முடியாமல் அவருடைய சாதாரண சந்தேகத்தைக்கூட தீர்க்க முடியாத நிலையும் ஏற்படும்.
- இதன் காரணமாக குடும்பத்தையும் சரிவர பராமரிக்க இயலாத நிலை ஏற்படும்.
- சரிவர கணக்குகள் பராமரிக்க இயலாததனால் பணத்தை கையாளுவதில் சிரமம் ஏற்பட்டு நாளடைவில் குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் நிலை ஏற்படும்.
- மேலும் பொது அறிவு இல்லாத காரணத்தால், பாலியல் ரீதியான பிரச்சனைகள், கணவன் மனைவியினிடையே ஏற்பட்டு குடும்பம் சிதையும் வாய்ப்பு உண்டு.
- இதன் தொடர்ச்சியாக தற்கொலை மற்றும் கொலைகள் நிகழ்வதால் இளம் வயதிலேயே விதவைகளாகவும், குடும்பத்தினரால் புறந்தள்ளப்பட்டவர்களாகவும், அனைவராலும் கைவிடப்பட்டவர்களாகவும் ஆகும் நிலை ஏற்படும்.
- இதன் காரணமாக எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக குழந்தைகள் ஆதரவற்று மிகவும் துன்புறும் சூழ்நிலையில் வாழக்கூடிய நபர்களாக ஆகும் வாய்ப்பு மிகவும் அதிகம்.

**குழந்தைத் திருமணத்தை பற்றி யாரிடம் தகவல் தெரிவிக்கலாம்**

- மாவட்ட ஆட்சியர் / மாவட்ட நீதிபதி
- குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர்
- மாவட்ட குழந்கைள் பாதுகாப்பு அலுவலர் (DCPO)
- காவல் துறை (குழந்தை நல அலுவலர், சிறப்பு சிறார் காவல் அலகு)
- குழந்தை நலக்குழு (தலைவர், உறுப்பினர்கள்)

- கிராமநிர்வாக அதிகாரி, பஞ்சாயத்துத் தலைவர்
- முதல் வகுப்பு நீதிபதி (அல்லது) பெருநகர் நீதிபதி
- பள்ளித் தலைமையாசிரியர்
- ஒன்றிய / கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு
- சைல்டு லைன் (1098)

**குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்த யாருக்கு அதிகாரம் உண்டு**

குழந்தைத் திருமணம் தடுப்புச் சட்டம் 2006-இன் கீழ் தமிழ்நாடு அரசு குழந்தைத்திருமண தடுப்பு விதிகள் 30-ம் தேதி டிசம்பர் 2009 அன்று வெளியிட்டுள்ளது. (அ.ஆ (நிலை) எண்.169, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத்துறை, நாள் : 30-12-2009)

இதன் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சமூக நல அலுவலர் தான் குழந்தைத் திருமணம் தடுப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளதால் அத்தகு குழந்தைத் திருமணத்தை தடுக்கும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உண்டு.

ஒரே சமயத்தில் அநேக குழந்தைத் திருமணங்கள் நடக்கும் பட்சத்தில் மாவட்ட நீதிபதி / மாவட்ட ஆட்சியர் அக்குழந்தைத் திருமணங்கள் தடுப்பு அலுவலர் ஆவார்.

மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், காவல்துறை (குழந்தை நல அலுவலர், சிறப்பு சிறார் காவல் அலகு), குழந்தை நல குழுமம் (தலைவர், உறுப்பினர்கள்) சைல்டு லைன் (1098), வட்டாட்சியர் (தாசில்தார்), அனைவரும் மாவட்ட குழந்தைத் திருமணம் தடுப்பு அலுவலருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால் குழந்தையை மீட்டு மறுவாழ்விற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க முடியும்.

**சட்டம் என்ன சொல்கிறது :**

**குழந்தைத் திருமணம் தடுப்பு சட்டம் 2006 ன் படி...**

- குழந்தைத் திருமணம் என்பது குற்றம்.
- மாவட்ட நீதிமன்றம் குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்த ஆணை வழங்கும். (பிரிவு-13)
- குழந்தைத் திருமணம் பிணை ஆணை வழங்கா குற்றம் ஆகும். (பிரிவு-15)
- குற்றம் புரிந்தவர்களுக்கு 2 ஆண்டு கடுங்காவல் தண்டனை (அல்லது) 1 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டும்.
- 

**குழந்தைத் திருமணத்தடைச் சட்டம் 2006 இன் படி குற்றம் செய்தவராக கருதப்படுவோர்**

- அப்பெண்குழந்தையை திருமணம் செய்து கொண்ட 18 வயது

*மேற்பட்ட வாலிபர் / இளைஞர் குற்றவாளி ஆவார். (பிரிவு-9)*

- *குழந்தைத் திருமணத்தை நடக்கச் செய்தவர், நடத்தத் தூண்டியவர், நெறிப்படுத்தியவர், நடத்தியவர் இவர்கள் அனைவரும் குற்றவாளிகள். (பிரிவு-10)*
- *அக்குழந்தையை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பெற்றோர்கள் அல்லது காப்பாளர், ஒரு நிறுவனத்தின் அல்லது ஒரு கூட்டமைப்பின் அங்கத்தினர் மற்றும் குழந்தைத் திருமணத்தை ஏற்பாடு செய்த, அனுமதித்த பங்கேற்ற மற்றும் அந்தத் திருமணத்தைத் தடுக்கத்தவறிய எந்த நபரும் குற்றவாளிகளாக கருதப்படுவார்கள். (பிரிவு-11)*

**குழந்தைத் திருமணம் நடந்த பிறகு திருமணத்தை முறிக்க முடியுமா?**

- *திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து 2 வருடத்திற்கு உள்ளாக, திருமணம் செய்த குழந்தை வயது வந்தோரின் நிலை அடையும் வரை இத்திருமணத்தை முறிக்க முடியும்.*
- *திருமணம் செய்து வைக்கப்பட்ட குழந்தை அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட அதன் உற்ற தோழி / தோழர் ஆகியோர்களே திருமண முறிவுக்கான மனுவை அளிக்க முடியும்.*

**மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்**

- *குழந்தைத் திருமணத்தை பற்றி தகுந்த ஆதாரங்களை சேகரித்தல்.*
- *குழந்தையின் வயதை உறுதிப்படுத்தல்.*
- *சம்பந்தப்பட்ட குழந்தையின் திருமண வீட்டார்கள் இருவரிடமும் குழந்தைத் திருமணம் செய்தால் அதற்கான தண்டனையும், குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றியும் எடுத்துக் கூறி குழந்தைத் திருமணத்திலிருந்து குழந்தையை மீட்கலாம்.*
- *குழந்தையின் உறவினர்கள் குழந்தைத் திருமணம் தடுத்தலுக்கு எதிராகச் செயல்பட்டால் குழந்தைத் திருமணம் பற்றி எடுத்துக்கூறி, குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர் குழந்தையைப் பாதுகாக்கவும், மீட்கவும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்*
- *குழந்தைத் திருமணம் தடுப்பு அலுவலர் மீட்கப்பட்ட குழந்தையைக் குழந்தைகள் நல குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.*
- *மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலுவலர், குழந்தைத் திருமண தடுப்பு அலுவலருடன் ஒருங்கிணைந்து குழந்தையின் மறு வாழ்விற்காக தகுந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளல் வேண்டும்.*

## குழந்தைகளுக்குத் தீங்கிழைத்தல்

**தீங்கிழைத்தல்** (Abuse) **என்றால் என்ன?**

*தீங்கிழைத்தல் என்பது குழந்தைகளுக்கு, எதிராக உடல் ரீதியாக, மன ரீதியாக, பாலியல் ரீதியாக, உணர்வு ரீதியாக நடத்தப்படும் வன்முறைகள், உரிமைகள் மீறல், புறக்கணிப்பு போன்ற நிகழ்வுகள் அடங்கியது ஆகும்.*

**1. உடல் ரீதியான தாக்குதல் அல்லது தீங்கிழைத்தல்** (Physical Abuse) :

*தீக்காயம் ஏற்படுத்துதல், அடித்தல், உதைத்தல், குத்துதல், தாக்குதல் போன்ற நிகழ்வுகள் மூலம் குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல் அனைத்தும் உடல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.*

**2. பாலியல் ரீதியான தீங்கிழைத்தல்** (Sexual Abuse) :

*பாலியல் ரீதியான தொந்தரவுகள், பாலியல் ரீதியான தகாத உறவுகளுக்கு குழந்தைகளை தவறாக பயன்படுத்துதல், பாலியல் ரீதியான தாக்குதல்கள் போன்றவைகள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஆகும். இவற்றில் குழந்தைகளின் அந்தரங்க உறுப்பை தொடுதல். வல்லுறவு உடலுறவு கொள்ளுதல் போன்றவை பாலியல் ரீதியான தீங்கிழைத்தல் ஆகும்.*

**3. புறக்கணிப்பு** (Neglect) :

*குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை வழங்கமறுத்தல் அல்லது தவறுதல் புறக்கணிப்பு ஆகும். இவை,*

*உடல் ரீதியான புறக்கணிப்பு - உணவு, உடை மற்றும் சுகாதாரம்*

*கல்வி ரீதியான புறக்கணிப்பு - கல்வித் தேவைகள்*

*மன ரீதியான புறக்கணிப்பு - அன்பு இல்லாமை, கவனிப்பு இல்லாமை*

**4. உணர்வு ரீதியான தீங்கிழைப்பு** (Emotional Abuse)

*மன அதிர்ச்சி ஏற்படுத்தும்செயல்கள், தோல்விகள், திட்டுதல், தண்டனை கொடுத்தல், ஒப்பிட்டு பேசுதல், சிறுமைப் படுத்துதல் போன்ற நிகழ்வுகள் குழந்தைகளிடையே உணர்வு பூர்வமான பாதிப்பை ஏற்படுத்துவது ஆகும்.*

**தீங்கிழைத்தலுக்கு உள்ளான குழந்தைகளின் விவரங்கள்**

- *தற்போதைய சூழ்நிலையில் 69% குழந்தைகள் உடல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதில் 48.7% குடும்ப உறுப்பினர்களினாலும், 34% இதர நபர்களினாலும் பாதிக்கப்படுகின்றனர்.*
- *பெண் குழந்தைகளின் 50.76% பேர் பாலியல் துன்புறுத்தல்*

தாக்குதல் போன்ற நிகழ்வுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

- *48.37% பேர் உணர்வு ரீதியான தீங்கிழைத்தலுக்கு ஆளாகின்றனர்.*
- *83% பேர் பெற்றோர்களினால் உணர்வு ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர்.*
- *70% தீங்கிழைக்கப்பட்ட குழந்தைகள் அத்தகைய நிகழ்வுகளை யாரிடமும் தெரிவிப்பதோ அல்லது பகிர்ந்து கொள்வதோ இல்லை.*
- *65% குழந்தைகள் பள்ளிகளில் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.*

**குழந்தைகளுக்குத் தீங்கிழைக்க அதிக வாய்ப்புள்ள இடங்கள்**

குழந்தைகளுக்குத் தீங்கிழைக்க சாத்தியமான இடங்கள் என்று குறிப்பிட்டு கூற இயலாது. ஏனெனில் பல இடங்களில் பல்வேறு விதமான நிகழ்வுகள் அன்றாடம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. பொதுவாக அதிக நேரம் செலவிடுவதால் கீழ்கண்ட இடங்கள் அதிக வாய்ப்புள்ள இடங்களாகும்.

**குடும்பங்களில்**

- *பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் அவர்களின் திறமைக்கு மீறி எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்து அதனால் ஏற்படும் வெறுப்பினை குழந்தைகள் மீது செலுத்துகின்றனர்.*
- *வறுமையின் காரணமாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புதல். அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யாமல் இருத்தல்.*
- *குடும்பங்களில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு கிடைக்கப்பெறாத குழந்தைகள் வீட்டை விட்டு ஓடுதல். தெரு ஓரங்களில் வாழ்தல்.*
- *பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் அனாதை குழந்தைகள் தங்களின் அடிப்படைத் தேவைகளுக்காக வேலை செய்து, சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்ந்து ஊட்டச்சத்து உணவு கிடைக்கப்பெறாமல் போகும்போது சமுதாயத்தால் பல வழிகளில் பாதிக்கப்படுகின்றனர்.*
- *பெற்றோர் தங்கள் குழந்தைகளின் முன்னிலையில் தவறான தீய வார்த்தைகளை உபயோகித்தல், சண்டை போட்டுக் கொள்ளுதல், அடித்தல் போன்ற நிகழ்வுகள் ஏற்படும் போது உள ரீதியான பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.*
- *போதிய இடவசதி இல்லாத குடும்பங்களில் பெற்றோர் குடும்ப*

பிரச்சனைகளை குழந்தைகள் முன் பேசும் போது அவர்களின் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டு பள்ளி இடைநிற்றல் சூழலுக்கு தள்ளப்படுகின்றனர்.

- குடும்பத்தில் அன்பு கிடைக்கப்பெறாத குழந்தைகள் பிறரிடம் தேடும் போது தீய பழக்கங்களுக்கு ஆளாக்கப்படுவது மட்டுமல்லாமல் மற்றவர்கள் தவறான காரியங்களுக்கு ஈடுபடுத்த அதாவது பாலியல் தொந்தரவு செய்ய வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கின்றனர்.

**கல்வி நிறுவனங்களில்**

- பள்ளியில் படிக்கின்ற மாணவர்களிடம் ஆசிரியர்கள் அவர்களின் திறமைக்கு மீறி எதிர்பார்க்கும் போது பாகுபடுத்தப்படுகின்றனர்.
- மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் புறக்கணிக்கப்படுதல்.
- ஆசிரியர்கள் குழந்தைகளை வகுப்பறையில் தண்டிப்பதும், மற்ற மாணவர்களுடன் ஒப்பிட்டு பேசுவதும் மற்றும் விரும்பத்தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துவதும், குழந்தைகளை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிக்கின்றது.
- பள்ளியில் பெண் குழந்தைகளிடம் ஆண் ஆசிரியர்கள் கண்ஜாடை காட்டுவது. இரண்டு அர்த்தமுள்ள வார்த்தைகளை பேசுவது. அடிப்பது போன்ற காரணத்தினால் அவர்கள் பள்ளி இடைநிற்க வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

**தீங்கிழைத்தலினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்**

1. குழந்தைகளுக்குத் தீங்கிழைப்பதினால் தங்களை தாங்களே தனிமைப்படுத்தி கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.
2. குழந்தைகளின் உடலில் பாதிப்பு ஏற்படுகிறது.
3. மன அழுத்தம் ஏற்படுதல்.
4. குறைவான சுய மதிப்பு மற்றும் தாழ்வு மனப்பான்மை
5. மூர்க்கத்தனமான நடத்தை
6. தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொள்ளுதல்.
7. ஆளுமைக் கோளாறுகள் / ஆளுமைத் தன்மை குறைவு.
8. தற்கொலை முயற்சிகள்
9. பாலியல் தொழிலுக்கு தள்ளப்படுவதால் பாலியல் நோய்க்கு ஆளாகுதல்
10. குழந்தைகளின் சிந்திக்கும் திறன் / தனித்தன்மை குறைந்து விடுகிறது.
11. குழந்தைகளின் சுதந்திரம் பறிபோகிறது.
12. மகிழ்ச்சியற்ற தன்மை

குழந்தைகளுக்குத் தீங்கிழைத்தலின் பாதிப்புகள் தீங்கிழைத்தல் நடந்து முடிந்தவுடன் நின்றுவிடாது. அவர்ளின் வாழ்நாள் முழுவதும் அவ்வப்போது / அன்றாட வாழ்வில் கூட தீங்கிழைத்தலின் பாதிப்பு இருந்து கொண்டே இருக்கும்.

**குழந்தைகளுக்கு தீங்கிழைத்தலை தடுக்க வழி முறைகள் :**

- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் தோழமை உணர்வுடன் பழக வேண்டும்.
- பெற்றோர்கள் குழந்தைகளை ஆண் / பெண் என்று பாரபட்சம் காட்டாமல் சமமாக நடத்தும் போது புறக்கணிப்பு குறைந்து அவர்களின் அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.
- குழந்தைகள் தோல்வி அடையும் போது அவர்களைத் திட்டுதல் அல்லது தண்டனை கொடுப்பதை தவிர்த்து அவர்களை ஊக்குவித்தல் வேண்டும்.
- மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பேசாமல் அவர்களின் தனித்தன்மை / திறமைகளைக் கண்டறிந்து அவற்றை வளர்த்துக் கொள்ள பெற்றோர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆவண செய்ய வேண்டும்.
- பிற இடங்களில் குழந்தைகளுக்குத் தீங்கிழைத்தல் தொடர்பாக ஏற்பட்டுவரும் விஷயங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நடக்கின்றதா எனப் பெற்றோர்கள் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். குழந்தைகளுடன் அமர்ந்து அன்றாட நிகழ்வுகளை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் கூறும்போது பயப்படும் வகையில் முகபாவனைகள் மாற்றுதல் கூடாது.
- தங்களுடைய குழந்தைகளுக்குத் தீங்கிழைத்தல் பற்றிய விவரங்கள் அறிந்து பின் உடனடியாக அதைச் சரிசெய்ய ஆற்றுப்படுத்துதல் / உளவியல் நிபுணர்கள் மூலம் ஆற்றப்படுத்துதல் வழங்க வேண்டும்.
- குழந்தைகளின் நலனில் பெற்றோர்கள் எடுக்கும் முடிவுகள் சரியானதா என அறிந்தும் குழந்தையின் விருப்பம் என்ன என்று அறிந்தும் செயல்பட வேண்டும்.

**கல்வி நிறுவனங்கள்**

1. ஆசிரியர்கள், குழந்தைகளுக்குப் பாதுகாப்பான தொடுதல், (Safe and undsafe touch) பாதுகாப்பற்ற தொடுதல் பற்றிய தகவல்களை கற்றுக் கொடுக்க வேண்டும்.
2. வாழ்க்கைத் திறன் கல்வியினைக் குழந்தைகளுக்கு பயிற்றுவிக்க வேண்டும்.

3. பள்ளிகளில் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை வகுப்பு / பள்ளி மாணவர் தலைவர் மேற்கூறிய நிகழ்வுகளை தலைமையாசிரியரிடம் கொண்டு சென்று தீர்வு காணும் வகையில் பயிற்சி கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பள்ளிகளில் தீங்கிழைக்கப்படும் போது குழந்தைகள் தன்னைத் தானே தாழ்வாக நினைப்பது, பள்ளியில் கவன குறைவாக இருப்பது போன்ற இன்னும் பல்வேறு பிரச்சனைகளிலிருந்து விடுபட மேற்கூறிய கல்வி மற்றும் பயிற்சி அளிப்பது மூலம் சாத்தியப்படும்.

**சேவை நிறுவனங்கள் :**

தங்களது கல்வி நிறுவனங்களில் தங்கியுள்ள / கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தீங்கு விளைவிப்பதை அறிந்தவுடன் தீங்கின் தன்மையை பொறுத்து சம்மந்தப்பட்ட அலுவலகத்துக்கு (உதாரணமாக பள்ளித் தாளாளர் தலைமை ஆசிரியர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், காவல்துறை அலுவலர், காவல்துறை அலுவலர் போன்றவர்களுக்கு உடனடியாக தக்க ஆதாரங்களுடன் தெரிவித்து தீர்வுகளைக் காண முயற்சிக்க வேண்டும்.

குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அந்தந்த இல்லங்களில் உண்டு. உறைவிட வசதியுடன் உள்ள குழந்தைகளுக்கு மற்றவர்களால் ஏதேனும் தீங்கிழைக்கப்பட்டிருந்தால் அது பற்றிய தகவலினை ஆதாரத்துடன் இல்ல நிர்வாகி, கண்காணிப்பாளர் மேற்பார்வையாளர்களிடம் தகவல் தெரிவித்து குழந்தைகளை பாதுகாத்தல் வேண்டும்.

**பொதுமக்களின் ஒத்துழைப்பு :**

- குழந்தைகளுக்குத் தீங்கிழைப்படுவதை தவிர்க்க அல்லது அவர்களை பாதுகாக்க 1098 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கலாம்.
- அனைத்து காவல் நிலையங்களிலும் குழந்தை பாதுகாப்பிற்காக குழந்தை நல அலுவலர் தனி காவல் துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பதால் அவரிடம் புகார் / தகவல் அளிக்கலாம்.
- குழந்தைகளுக்குத் தீங்கிழைக்கப்படுவதை தடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

# தொழிலாளர் துறை

## தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம்
## மற்றும்
## தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள்
## சமூகப் பாதுகாப்பு நல வாரியம்
## மற்றும் 15 நல வாரியங்கள்

**தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் 17 நல வாரியங்கள்**

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்
2. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியம்
3. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்
4. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்
5. தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்
6. தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்
7. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்
8. தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்
9. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிபட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம்
10. தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்
11. தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்
12. தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்
13. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம்
14. தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம்
15. தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம்
16. தமிழ்நாடு பாதையோர வணிகர்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம்
17. தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம்

**பதிவு செய்வதற்கான தகுதிகள் / வழிமுறைகள்**

*1. விண்ணப்பதாரர் 18 வயது முதல் - 60 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.*

*2. தொழிலாளி தனது புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்தில் ஒட்டி, மற்றொரு புகைப்படத்தை ஒரு உறையில் வைத்து விண்ணப்பத்துடன் இணைத்து விண்ணப்பத்தை முழுமையாக பூர்த்தி செய்து தொழிலாளர்கள் நேரடியாக அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில் அளித்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.*

*3. பதிவுக் கட்டணம் ஏதும் இல்லை*

*4. பதிவு விண்ணப்பத்தில் சம்மந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ளவர் என்பதற்கானச் சான்று கீழ்க்கண்ட எவரேனும் ஒருவரால் அளிக்கப்பட வேண்டும்.*

*அ) வேலையளிப்பவர் ஆ) பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் (கட்டுமான வாரியம் மட்டும்). இ) கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் அரசு அமைப்புகள் அல்லது நிறுவனங்கள் (கட்டுமான வாரியம் மட்டும்). ஈ) பதிவு பெற்ற தொழிற் சங்கம் உ) கிராம நிர்வாக அலுவலர் / வருவாய் ஆய்வாளர் (சென்னை மாவட்டத்தில் மட்டும்) ஊ) தொழிலாளர் உதவி ஆய்வாளர் அல்லது உதவி இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களுக்கு மட்டும்)*

*5. பதிவு விண்ணப்பத்தில், தொழிலாளர் செய்யும் வேலை குறித்த பணிச்சான்றினைத் தொழிற்சங்கம் வழங்கியிருந்தால், தொழிற்சங்கப் பதிவு எண் மற்றும் முகவரியுடன் கூடிய முத்திரை இடம் பெற்றிருக்க வேண்டும்.*

*6. வயது / இருப்பிடம் தொடர்பாக கீழ்க்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் சான்றொப்பமிட்ட நகலினை* (Attested Copy) *விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.*

*அ) பிறப்பு / இறப்பு பதிவாளரின் சான்று ஆ) பள்ளி அல்லது கல்லூரிச் சான்று இ) வாகன ஓட்டுநர் உரிமம் நகல் ஈ) தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் உ) குடும்ப அட்டை நகல் ஊ) அரசு மருத்துவரிடமிருந்து (சிவில் சர்ஜன் தரத்தில்) பெறப்பட்ட வயது குறித்த சான்று (அசலில்)*

*7. தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கணக்கு புத்தக நகல்.*

8. ஆதார் அட்டை (கூடுதல் ஆவணமாகப் பெறப்படுகிறது)

**பதிவினை புதுப்பித்தல்**

ஐந்து வருடத்திற்கு ஒரு முறை பதிவினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். புதுப்பித்தலுக்கு கட்டணம் ஏதும் இல்லை. 60 வயது நிறைவடைந்த தொழிலாளியின் பதிவினைப் புதுப்பிக்க இயலாது. உறுப்பினரால் அளிக்கப்படும் புதுப்பித்தல் விண்ணப்பம் தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில் பெறப்பட்டு, உரிய சரிபார்த்தலுக்குப் பின் புதுப்பிக்கப்பட்டு அடையாள அட்டை உறுப்பினருக்கு திரும்ப அளிக்கப்படும்.

**இரண்டாம்படி அடையாள அட்டை**

இரண்டாம் அடையாள அட்டை வழங்கக் கோரும் மனு (ரூ.20/- கட்டணத்துடன்) தொழிலாளரின் விண்ணப்பத்தின் மீது நேரடி விசாரணை மேற்கொண்டு இரண்டாம்படி அடையாள அட்டை (Duplicate I.D. Card) கோரும் நபர் அவர்தானா என உறுதி செய்து தொழிலாளர் அலுவலரால் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) இரண்டாம்படி அடையாள அட்டை வழங்கப்படும்.

**நலத்திட்ட உதவிகள் வங்கிக் கணக்கில் செலுத்துதல்** (ECS)

அரசாணை எண். 102, நாள் : 08.11.2011 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை)-இன் படி இவ்வாரியங்களின் நலத் திட்ட உதவிகளுக்கான பணப்பயன்கள் நேரடியாக பதிவு பெற்ற தொழிலாளியின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

**மாண்புமிகு முதல்வர் அவர்களின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்**

இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு வருடம் ரூ. 1,00,000/- வீதம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 1,50,000/- வரை வழங்கப்படும். இத்திட்டத்தில் 1016 சிகிச்சை முறைகளுக்கும், 113 தொடர் சிகிச்சை வழிமுறைகளுக்கும் மற்றும் 23 நோய் பரிசோதனை கண்டுபிடிப்பு முறைகளுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் இதர 16 அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களும் இத்திட்டத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

**திருமணம்**

| | |
|---|---|
| (குடும்பத்திற்கு இருமுறை மட்டும்) தொழிலாளர் | ரூ. 3000/- (ஆண்) |
| (அ) தனது மகன் (அ) மகள் திருமணத்திற்கு | ரூ. 5000/- (ஆண்) |

**மகப்பேறு**

| | |
|---|---|
| பதிவு பெற்ற பெண் தொழிலாளர்களுக்கு (முதல் இரு குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ. 6000/- |
| கருக்கலைப்பு / கருச்சிதைவு (பதிவு பெற்ற பெண் தொழிலாளர்களுக்கு இருமுறை மட்டும்) | ரூ. 3000/- |

**கல்வி**

| | |
|---|---|
| (ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்) அ) 10-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ. 1000/- |
| ஆ) 11-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ. 1000/- |
| இ) 12-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ. 1500/- |
| ஈ) 10-ம் வகுப்பு தேர்ச்சி | ரூ. 1000/- |
| உ) 12-ம் வகுப்பு தேர்ச்சி | ரூ. 1500/- |
| ஊ) பட்டப்படிப்பு முறையான பட்டப்படிப்பு | ரூ. 1500/- |
| விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 1750/- |
| எ) பட்ட மேற்படிப்பு முறையான பட்ட மேற்படிப்பு | ரூ. 4000/- |
| விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 5000/- |
| ஏ) தொழில்நுட்பப் பட்டப் படிப்பு சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் போன்ற தொழில் நுட்பப் பட்டப் படிப்பு | ரூ. 4000/- |
| விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 6000/- |
| ஐ) தொழில் நுட்பப் பட்ட மேற்படிப்பு | ரூ. 6000/- |
| விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 8000/- |
| ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ. 1000/- |
| விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 1200/- |

**கண் கண்ணாடி**

உதவித் தொகை — ரூ. 500/- க்கு மிகாமல்

**ஓய்வூதியம்**

*60 வயது நிறைவு செய்த பதிவு பெற்ற தொழிலாளியாக இருக்க வேண்டும் அல்லது 60 வயதினை நிறைவு செய்யாதிருந்தாலும் பதிவு செய்திருந்து நோயின் காரணமாக வழக்கமான பணி செய்ய இயலாமல் முடக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்* — ரூ. 1000/- *(மாதம் ஒன்றுக்கு)*

**குடும்ப ஓய்வூதியம்**

ஓய்வூதியம் பெறும் கட்டுமானத் தொழிலாளி இறந்துவிட்டால் அவரது கணவர் / மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் — ரூ. 400/- *(மாதம் ஒன்றுக்கு)*

**விபத்து மரணம்**

விபத்து மரண உதவித் தொகை — ரூ. 1,00,000/-

பணியிடத்தில் விபத்து மரணம் — ரூ. 5,00,000/-

*(கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டும்)*

**விபத்து ஊனம்**

உடல் உறுப்பு இழப்பு அல்லது உடல் உறுப்பு துண்டிக்கப்படுதல் அல்லது நிரந்தரமாக உடல் உறுப்பு செயல் இழப்பு ஏற்பட்டால் ஊனத்திற்கு தகுந்தாற் போல் இழப்பீட்டுத் தொகை — ரூ. 1,00,000/- வரை

விபத்து ஊன உதவித் தொகையினை தவிர ஊனத்தின் தன்மைக்கேற்ப செயற்கை உறுப்புகள் / சக்கர நாற்காலி தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும்.

**இயற்கை மரணம்**

நியமனதாரருக்கு மட்டும் — ரூ. 15,000/-

**ஈமச்சடங்கு**

நியமனதாரருக்கு மட்டும் — ரூ. 2,000/-

## நல உதவி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

**பொதுவான ஆவணங்கள்**

*அசல் அடையாள அட்டை வங்கி கணக்கு புத்தக நகர். குடும்ப அட்டை நகல். ஆதார் அட்டை (கூடுதல் ஆவணமாகப் பெறப்படுகிறது)*

**திருமணம்**

*திருமண அழைப்பிதழ் திருமணம் நடைபெற்றதற்கான சான்று.*
*திருமணம் செய்து கொள்பவர் ஆண் எனில் 21 வயதும், பெண் எனில் 18 வயதும் நிறைவு செய்தார் என நிரூபிக்கும் வயது சான்றிதழ்.*

**மகப்பேறு**

*அசல் பிறப்புச் சான்றிதழ் குறைப்பிரசவம் / கருக்கலைப்பு எனில் பதிவு பெற்ற மருத்துவரின் சான்று. (உதவி சிவில் சர்ஜன் தரத்தில்)*

**கல்வி**

- *கல்வி பயிலும் ஆண்டிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.*
- *பள்ளித் தலைமை ஆசிரியடமிருந்து பெறப்படும் படிப்புச் சான்றிதழில் பதிவு பெற்ற தொழிலாளியின் மகன்/மகள் என்றும் கல்வி பயிலும் ஆண்டினையும் குறிப்பிட வேண்டும்.*
- *சான்றொப்பமிட்ட தேர்ச்சி பெற்ற மதிப்பெண் பட்டியல் / பள்ளி மாற்றுச் சான்றிதழ்.*
- *கல்லூரிப் படிப்பில் சேர்ந்து பயில்வது குறித்தான கல்வி நிலைய முதல்வரிடமிருந்து பெறப்பட்ட அசல் சான்றிதழ்.*
- *விடுதியில் தங்கிப் படிப்பவர் முதல்வரிடம் அல்லது விடுதி காப்பாளரிடம் இருந்து பெறப்பட்ட சான்று.*

**கண் கண்ணாடி**

*கண் மருத்துவரின் பரிசோதனைச் சான்று கண் கண்ணாடி வாங்கியதற்கான அசல் பற்றுச்சீட்டு*

**ஓய்வூதியம்**

*இரண்டு பாஸ்போர்ட் அளவு போட்டோ, மருத்துவச் சான்று அரசு சிவில் சர்ஜனால் வழங்கப்பட்டது. (முடக்க ஓய்வூதியத்திற்கு மட்டும்)*

**குடும்ப ஓய்வூதியம்**

*இரண்டு பாஸ்போர்ட் அளவு போட்டோ, ஓய்வூதியதாரரின் அசல் இறப்புச் சான்றிதழ் வாரிசு உரிமைச் சான்றிதழ்*

**விபத்து மரணம்**

*அசல் இறப்பு சான்றிதழ் முதல் தகவல் அறிக்கை* (FIR)*பிரேதப் பரிசோதனை அறிக்கை*

**விபத்து ஊனம்**

*(உதவித் தொகை & உதவி உபரணம்) மருத்துவச் சான்று பணித்திறன் இழப்புச் சான்று (சிவில் சர்ஜனால் வழங்கப்பட்டது) முதல் தகவல் அறிக்கை* (FIR)

**இயற்கை மரணம், ஈமச்சடங்கு**
*அசல் இறப்பு சான்றிதழ்*

**மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110இன் கீழ் அறிவித்த புதிய திட்டங்கள் :**

*1. கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியிடம் தேடிச் சுகாதார சேவைகள் வழங்கும் வகையில் 50 நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்த அனுமதியளித்து அரசு ஆணையிட்டுள்ளது.*

*2. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக போக்குவரத்து வசதிக்கான செலவினத்தை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.*

*3. வெளிமாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்து தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து அவர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.*

*4. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 5 இடங்களில் 1000 பேர் தங்கும் வகையிலும், சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 4 மாவட்டங்களில் தலா ஒரு இடத்தில் 500 பேர் தங்கும் வகையிலும், தூங்கும் அறைகள் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.*

*5. கட்டுமானத் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெறும் 50 இடங்களில் தற்காலிக அங்கன்வாடி மையங்கள் துவங்குவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.*

**2015 16ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்**

*1. அமைப்புச்சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்தல், புதுப்பித்தல், மற்றும் கேட்பு மனுக்களை இணைய தளம் வாயிலாக சமர்ப்பிக்கும் வசதி : விண்ணப்பங்களின் நிலை குறித்து தொழிலாளர்களின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தி (SMS) பங்களிப்பு தொகையினை நேரடியாக செலுத்துவதற்கு இணைய தள வசதி ஆகியவை உருவாக்கப்படும்.*

2. அமைப்புச்சாரா தொழிலாளர்கள் மற்றும் வெளிமாநில தொழிலாளர்கள் தங்களை வாரியங்களில் பதிவு செய்வதற்கான வழிமுறைகள், நலத்திட்ட உதவிகள் குறித்த தகவல்கள் மற்றும் கோரிக்கைகள் தெரிவிப்பதற்கு கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய பன்மொழி உதவி மையம் உருவாக்கப்படும்.

---

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**

*8, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, சென்னை - 34*

044-28264952 / 28216529 tncwwbhead@gmail.com

---

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம்**

*மற்றும் 15 நல வாரியங்கள் ஜி / 133, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் வணிக வளாகம், அண்ணாநகர் (கிழக்கு) சென்னை - 102.*

044-2663 1147 / 48 / 49 / 50 manualboard@gmail.com

---

*மதுரை வீட்டு வசதிப் பிரிவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், எல்லீஸ்நகர், மதுரை - 16.*

0452-2601449 / losssmadurai@gmail.com



# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு




முறையாகச் சாலையை கடப்பது பாதுகாப்பானது



முறையற்றபடி சாலையைக் கடப்பதால் - முடிவு விபத்து





வயதானவர்கள்
மற்றும்
மாற்றுத் திறனாளிகள்
சாலையைக்
கடப்பதற்கு
நாம் உதவிடலாமே!



- ஓடும் பேருந்தில் ஏறவோ, இறங்கவோ கூடாது கரம், சிரம் புறம் நீட்டாதீர்
- பேருந்திலிருந்து பொருட்களை வெளியில் எறியவோ, எச்சில் துப்பவோ கூடாது.
- பேருந்து நிறுத்தங்களில் மட்டுமே ஏறி, இறங்க வேண்டும். சிக்னல்களில் பேருந்து நிற்கும் போது ஏறி, இறங்கக் கூடாது.
- பேருந்தில் ஏறி இறங்கும் போதும் பயணம் செய்யும் போதும் கைப்பிடிகளை பிடித்துக் கொள்வது நல்லது.



ரயில் அருகே வரும் தருவாயில் கவனம் தேவை.
எந்த வாகனமும் தண்டவாளத்தில் இருந்தால்
அதன் இயக்கம் உடனடியாக செயலிழந்துவிடும்.
வாகனத்தின் இஞ்சின் என்ற பகுதி தண்டவாளத்தின்
காந்தவிசையால் இயக்குவதை நிறுத்திவிடும்.
இவை தான் அதிக விபத்துக்கள் உருவாகின்றன.
இந்த விபரம் நிறைய பேருக்கு தெரியாது.
தெரிந்துகொள்ளுங்கள்..
உங்கள் - மனிதநேயம் என். அசோகன்





அதிக
பயணிகளை
வாகனத்தில்
ஏற்றுவதைத்
தவிர்ப்போம்



பேருந்து நிறுத்தமானது - பேருந்துகள் நின்று, பயணிகளை
ஏற்றி, இறக்குவதற்காக மட்டுமே - மற்ற வாகனங்கள் நிறுத்துவதற்காக அல்ல!



தவறான திசையில் வாகனத்தை இயக்காதீர்!
திடீர் என வாகனத்தை திருப்பவோ, நிறுத்தவோ செய்யாதீர்!



ஓட்டுநர் அருகில் அமர்ந்தும், நின்று கொண்டும் பயணம்
செய்ய பயணிகளை அனுமதிக்காதீர்!



சாலை சந்திப்புகள், பாலங்கள், வளைவுகள் போன்ற
இடங்களில் வாகனத்தை நிறுத்தாதீர்!



செல்போன் பேச்சு! இறுதிப் பேச்சு!!
திசை திரும்பும் கவனம்! திசை மாறும் பயணம்!!



போதையில் பயணம்! பாதையில் மரணம்!!
மது அருந்தி வாகனம் ஓட்டாதீர்!



ஆட்டோவை இயக்கும் முன்பு, சுத்தமான காக்கி சீருடை அணிந்தும், சட்டையில் பெயருடன் கூடிய பொதுப்பணி வில்லை (பேட்ஜ்) அணிந்தும், பின்பு இயக்கவும்.



நிறுத்துவீர் ஆட்டோவை ஓரமாக! – அதன் பிறகு ஏற்றுவீர் பயணிகளை பாதுகாப்பாக!!



கவனிப்பீர் அருகில் வரும் வாகனங்களை! செய்வீர் உரிய சிக்னல்களை, திருப்புவீர், நிறுத்துவீர் அதன் பின்பு



பயணிகளிடம் அன்பாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்வீர்! உரிய கட்டணம் மட்டுமே வசூலிப்பீர்.



உதவி செய்வீர் பள்ளி குழந்தைகளுக்கு ஆட்டோவில் ஏறும் பொழுதும்! இறங்கும் பொழுதும்!



வாகனப் புகை – நமக்குப் பகை ! சுற்றுச்சூழலைப் பாதுகாப்பீர் ! வாகனத்தை நல்ல முறையில் பராமரித்து இயக்குவீர்!




மதிப்பீர்! போக்குவரத்து காவலர் சைகைகளையும்! போக்குவரத்து சின்னங்கள்,சிக்னல்களையும்!



"படியில் பயணம் நொடியில் மரணம்"



ஏணிப்படியில் பயணம்! ஏன் இப்படிப் பயணம்!
மேற்கூரைப் பயணம்! மேலோகப் பயணம்!



மது அருந்திவிட்டு
வாகனத்தை ஓட்டக் கூடாது



வாகனம் இயக்கும் போது
ஓட்டுநர் செல்போன் பேசாதீர்!



எதிர்சாலைப் பயணம்! எமலோகப் பயணம்!



வளைவுகளில் முந்தாதீர்!
வாழ்க்கையில் முந்துவீர்!



இரண்டு சக்கர வாகனத்தில்
இருவர் மட்டுமே செல்ல வேண்டும்



அதிக பாரம்! ஆபத்தினை விளைவிக்கும்!



இருசக்கர வாகனம் இருவர் செல்வதற்கே!
தலைக்கவசம், உயிர்க்கவசம்!



சீட் பெல்ட் அணிந்து பயணம்
பாதுகாப்பான பயணம்!!



பரிசோதிப்போம் – நன்கு!
இயக்குவோம் – பின்பு!



இடதுபுறம் ஓரமாகச் செல்வோம்!
எதிர்எதிர் விபத்தினைத் தவிர்ப்போம்!



தொடர்வோம் 2 விநாடிகளுக்குப் பின்பு!
4 மற்றும் 6 தட சாலைகளில் இடதுபுறத் தடம்
மெதுவாக செல்லும் வாகனங்களுக்காக!



கவனிப்போம் அருகில் வரும் வாகனங்களை!
செய்வோம் உரிய சிக்னல்களை! வாகனத்தை
திருப்புவோம், நிறுத்துவோம் அதன்பின்பு!



எடுப்போம் சைடு ஸ்டாண்டு!
ஓட்டுவோம் அதன் பின்பு!



நிறுத்துவோம்- சாலைச் சந்திப்பில்!
வழிவிடுவோம்- பிரதானச் சாலை வாகனங்களுக்கு!



டிம் செய்வோம் ஹெட்லைட்டை!
எதிரில் வாகனம் வரும்போது!




நிறுத்துவோம் நிறுத்துகோட்டுக்கு முன்பு!
மதிப்போம் காவலர் உத்தரவுகளை!




மிதவேகம்! மிக நன்று!
நிர்ணயிக்கப்பட்ட வேகத்திற்குள் செல்வோம்!



கவனிப்போம் பிற வாகனங்களை!
முந்துவோம்-பாதுகாப்பாக-வலது புறமாக!



நிறுத்துவோம் அனுமதிக்கப்பட்ட இடங்களில்!
தவிர்ப்போம் விபத்தினை!



பாதுகாப்பற்ற இரயில் சந்திப்பு!
கடப்போம் இருபுறமும் கவனித்து!

# சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு

## இருச்சக்கர வாகன ஓட்டுனர்களுக்கு விதிகளை மதித்து சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு :

- இருசக்கர வாகனம் இருவருக்காக மட்டுமே. இருவருக்குமேல் பயணம் செய்யக் கூடாது.
- ஹெல்மெட் (தலைக்கவசம்) அணிந்து பயணம் செய்யவும்.
- உரிய சைகைகள் காட்டாமல் திரும்பக்கூடாது.
- முன்செல்லும் வாகனத்தை முந்தும்போது இடதுபக்கமாக முந்தக்கூடாது.
- மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டக்கூடாது.
- 50 கி.மீ வேகத்திற்கு மேல் செல்லக்கூடாது.
- சாலை சந்திப்புகளில் வேகத்தைக் குறைத்து செல்ல வேண்டும்.
- சிக்னலில், நிற்கும்போது மஞ்சள்கோட்டைத் தாண்டி வாகனத்தை நிறுத்தக் கூடாது.
- வளைவுகளில் முன்செல்லும் வாகனத்தை முந்தக் கூடாது.
- இருசக்கர வாகனங்களில் சரக்குகளை ஏற்றி செல்லக் கூடாது.
- இரு சக்கர வாகனத்தில் பெண்கள் பின்புறம் உட்கார்ந்து செல்லும்போது சேலைகள் மற்றும் துப்பட்டா பின்புற சக்கரத்தில் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள் எந்த வாகனத்தையும் ஓட்டக் கூடாது. அது குற்றச் செயலாகும்.
- இரு சக்கர வாகனம் ஓட்டுபவர்கள் **R.T.O.** சான்றிதழ்களை வாங்கியபின் சாலை விதிகளைக் கண்டிப்பாக மதித்துச் செல்ல வேண்டும்.

## ஆட்டோ ஓட்டுநர்களுக்கு விதிகளை மதித்து சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு :

- ஆட்டோ ஓட்டுநர்களுக்கு அருகில் பயணிகளை அமரச் செய்யக் கூடாது.
- பயணிகளிடம் பேசிக்கொண்டே வாகனத்தை ஓட்டக் கூடாது.
- மூன்று நபர்களுக்குமேல் ஆட்டோவில் பயணிகளை ஏற்றக் கூடாது.
- பள்ளிக் குழந்தைகளை அழைத்துச் செல்லும்போது ஸ்கூல் பைகளை வெளியே தொங்கவிடக் கூடாது.
- அளவுக்கு அதிகமாக பள்ளிக் குழந்தைகளை ஆட்டோவில் அழைத்துச் செல்லக் கூடாது.
- சீருடை, பெயர் வில்லையின்றி, கைலி கட்டிக் கொண்டு ஆட்டோ ஓட்டக் கூடாது.
- அனுமதியின்றி விளம்பரப்பலகை ஆட்டோவில் வைக்கக் கூடாது.
- அதிகப்பிரகாசமான மஞ்சள் விளக்குகளை ஆட்டோ முன்பு பொறுத்தக் கூடாது.
- புகைப்பிடித்துக் கொண்டும், மது அருந்திவிட்டு, செல்போன் பேசிக் கொண்டு ஆட்டோ ஓட்டக் கூடாது.
- ஆட்டோவில் சரக்குகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தக் கூடாது.

**சாலைப் பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடிப்போம் ! விபத்தைத் தவிர்ப்போம் !**
**வாகனங்களை ஓட்டத்தெரிந்த பலர் முக்கிய சாலை விதிகளைக் குறித்து அறிந்திருப்பதில்லை.**
**அதுகுறித்து முக்கிய தகவல்கள் உங்களுக்காக...**

- பகலில் முகப்பு விளக்கு எரியவிட்டு எதிரே வரும் வாகனத்தை எச்சரித்தபடி முன்னேறுவது குற்றம்.
- சாதாரண நேரங்களில் நான்கு புறங்களில் உள்ள எச்சரிக்கை விளக்குகளை எரியவிடக் கூடாது.
- அபாயகரமான அல்லது வாகனம் பழுதாகி நிற்கும்போது அல்லது பழுதான வாகனத்தைப் பிற வாகனங்கள் இழுத்துச் செல்லும்போது முன்புறம் பின்புறம் இரு வாகனங்களிலும் **ON TOW BOARD**, பலகை மாட்ட வேண்டும். முகப்பு விளக்கை எரியவிடக் கூடாது.
- ரோட்டின் நடுவில் கோடுகளை குறிப்பிட்ட இடைவெளியில் விட்டுவிட்டு போட்டிருந்தால் ஒரு வாகனத்தை இந்த இடத்தில் முந்திச் செல்லலாம் என்று பொருள். அதே சமயம் தொடர்ச்சியாக நீண்ட கோடுகளாகப் போட்டிருந்தால் முந்தக் கூடாது என்று பொருள்.
- ரோட்டின் நடுவில் தொடர்ச்சியாக இரட்டைக் கோடுகள் போட்டிருந்தால் அதை ஒரு தடுப்புச் சுவராகக் கருத வேண்டும்.
- ஓட்டுநருக்கு 20.5மீட்டர் (67 அடி) தொலைவில் இருந்து வரும் வாகனத்தின் பதிவு எண்ணை படிக்க முடிந்தால் கண்கள் நல்ல பார்வையுடன் உள்ளது என்று பொருள். எனவே ஆண்டிற்கு ஒரு முறை இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு, கண் பரிசோதனைகள் செய்வது அவசியம். அவ்வாறு இல்லாவிட்டால் அசம்பாவிதம் ஏதேனும் நேரிட்டால் அதுவே பயணிக்கும் அவர்களுக்கு எமனாக மாறிவிடும்.
- நான்குவழிச்சாலையின் நடுவே மீடியனில் அரளிச் செடிகளை வைத்துள்ளனர். காரணம் எதிரே வரும் வாகனத்தின் முகப்பு விளக்கு ஒளியில் இருந்து கண்களைப் பாதுகாக்கும். வறட்சியையும் தாங்கும். இச்செடிகளின் வேர்கள் அதிகம் வெளிவராது. இது வாகனங்கள் வெளிவிடும் கரியமல வாயுவான கார்பன்-டை-ஆக்சைடை அதிகம் உறிஞ்சிக் கொள்கிறது. அதோடு விலங்குகளும் இவற்றை உண்பதில்லை.
- நமக்கு அவசர அழைப்பு எண் “108” என்று தெரியும், மற்றுமோர் எண் “112” என்று பலருக்கும் தெரியாது. மொபைல் போன் சிக்னல் இல்லாத இடங்களிலும், மொபைலின் “கீ லாக்” செய்யப்பட்ட நிலையிலும் இந்த எண்ணை அவசர உதவிக்குப் பயன்படுத்தலாம்.
- மொத்தத்தில் விவேகமான வேகமே விபத்துகளில் இருந்து நம்மை பாதுகாக்கும்.

## உங்களுக்குத் தெரியுமா?



புகழ்பெற்ற இருதய சிகிச்சை நிபுணர் மேஜர் ஜெனரல் டாக்டர் கயானி, மும்பையில் ஒரு சொற்பொழிவில் கூறிய விஷயம் இருதய நோயாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் பயனளிக்கும். அவர் ஒரு மருத்துவப் பையைத் (Kit) தயாராக வைத்துக் கொள்ளச் சொன்னார். அந்தப் பையில்

1. டிஸ்பிரின் மாத்திரை 4
2. ஆஞ்சிஸட் மாத்திரை 4
3. டெபோஸிட் NT5, தோலில் ஒட்டும் ப்ளாஸ்டர் 1

அகியவை இருக்க வேண்டும்.

ஒருவருக்கு திடீர் என உடம்பு நெஞ்சுக்கு மத்தியில் இறுக்கினாற்போல் வலியுடன் இருந்தாலோ, அந்த வலி இடது கைப்பக்கம் சென்றாலோ அல்லது கழுத்தின் இரு பக்கமும் சென்றாலோ அப்போது வியர்த்து கொட்டுதலும், ஒருமாதிரி சுகவீனம் இருந்தாலோ அவர், இருதய பாதிப்பில் (ஹார்ட் அட்டாக் ) இருக்கிறார் என அர்த்தம் எனக் கூறினார்.

**அப்போது உடனடியாகச் செய்ய வேண்டியது;**

1. ஆஞ்சிஸட் மாத்திரையை நாக்கிற்கடியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. டிஸ்பிரின் மாத்திரையை வாயில் போட்டு அதைக் கடிக்காமல் அசை போட வேண்டும்.

3. டெபோஸிட் NT5 தோல் பிளாஸ்திரியை நெஞ்சின் இடது பக்கத்தில், பிய்த்து ஒட்ட வேண்டும்.

இந்தப் பொருட்களின் விலை ரூ.50 முதல் 55 தான். இது உடனடி மரணத்தை தவிர்க்கும். 40 வயதிற்கு மேற்பட்டோர் இந்தப் பையை தயாராகப் பாக்கெட்டில் அல்லது கைப்பையில் வைத்திருப்பது நலம்.

---

## பொதுமக்கள் கவனத்திற்கு

உரிமை மாற்றத்தின்போது வாகனத்தை வாங்குபவர் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் விண்ணப்பித்து (From 29 & 30 Transfer of Ownership) அசல் பதிவு சான்றிதழில் தனது பெயருக்கு உரிமை மாற்றம் செய்து கொள்ள வேண்டும். வாகனத்தை விற்பனை செய்பவர் இதனை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

முகவரி மாற்றத்தின் போது வாகன உரிமையாளர் சம்மந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் விண்ணப்பித்து (Form 33 Change od Address) தனது புதிய முகவரியினை உடனடியாக அசல் பதிவு சான்றிதழில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

வாகனம், பொது சாலையில் இயக்கத் தகுதியற்ற நிலையில் வாகனத்தின் அசல் பதிவுச் சான்றிதழை உரிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒப்படைத்து சான்றிதழ் (Certificate of Surrender) பெற வேண்டும்.

மேற்கண்ட செயல்முறைகளை முறையாகக் கடைப்பிடிக்கும் போது பதிவுச் சான்றிதழ்கள் தவறான முறையில் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு சட்டரீதியாக தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளலாம்.

# ஒரு டயரின் ஆயுள்காலம் எவ்வளவு?

லாரி, பஸ், கார், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் டயர்களுக்கெல்லாம் காலாவதி தேதி உள்ளதா? ஆம் உண்டு.

உற்பத்தி தேதியிலிருந்து ஒரு டயரின் ஆயுள் 4 வருடங்கள் தான்! நாம் இதை எப்படி தெரிந்து கொள்வது?

அந்த டயரிலேயே அது எழுதப்பட்டிருக்கும். 4 எண்கள் எழுதப்பட்டிருக்கும். (உ.ம்) 1612 என்று எழுதப்பட்டிருந்தால், அதற்கு அர்த்தம் அது 2012 வருடத்தில் 16-வது வாரத்தில் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பது தான். ஆக இந்த டயர் 2016இல் 16வது வாரத்தில் உபயோகப்படுத்த தகுந்ததல்ல.




இந்த டயர் விற்காமலேயே கடை ஷெல்ஃபில் நான்கு வருடம் இருந்தால் உபயோகிக்கத் தகுந்தது அல்ல என்றாகிவிடுமா?

சேதம் உண்டாகியிருக்கும். நான்கு வருடம் கடையில் ஸ்டாக்காக இருக்க சாத்தியக் கூறுகள் இல்லை. ஆனால் உற்பத்தி செய்து 4 வருடம் கழித்து, கடையிலிருந்து வாங்கிய டயர் இன்னமும் 4 வருடம் உழைக்கும் என எதிர்ப்பார்க்கக் கூடாது.

நான் டயர் வாங்கி 5 வருடம் ஆகிவிட்டது. நன்றாகத் தானே இருக்கிறது. அப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

கட்டாயம் டயரை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். கண்பார்வையில் அதன் தரம் தெரியாது. ஆனால் பழுதடைய வெடிக்க வாய்ப்பு முதல் நான்கு வருடத்தை விட, அடுத்தடுத்த வருடங்களில் வாய்ப்பு அதிகம். ஆகப்பிரிட்டன் நிர்ணயப்படி ஆறு வருடங்களில் (உற்பத்தி தேதியிலிருந்து, விற்ற தேதியிலிருந்து அல்ல) டயர்கள் மாற்றப்பட வேண்டும். டயர்கள் ரப்பரால் செய்யப்படுவதால் நாளாக நாளாக அது தேயும்.

ஷெல்ஃபில் இருந்தால் கூட ஆக்ஸிடைசேஷனால் வலுவிழக்கும். பிரிட்டனில் அதன் கோடுகள் 1.6 மி.மீ இருக்கும் வரை உபயோகிக்கலாம் என்று பாதுகாப்பு அமைப்பு கூறுகிறது.

டயர்கள், வெளியிலுள்ள ஆக்ஸிஜனுக்கு வெளிக்காட்டப்படுவதால் (Expose) டயரில் உள்ள காம்பௌன்ட்களை கடினமாகவும், உடையக்கூடியதாகவும் இந்த ஆக்ஸிஜன் மாற்றுகிறது. பழைய ரப்பர்பான்டைப் போல், சாதாரண அழுத்தத்தினாலேயே (Stress) பிரிந்துவிடும். இது இயற்கையாக நடப்பதால், டயர் உபயோகத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இது நடக்கும். இந்த பிரியும் தன்மை, முதல் நாளிலிருந்தே ஆரம்பித்துவிடும்.

அதனுடைய வயது பற்றி கவலைப்படாமல் எந்த டயரில் வெடிப்பு, அல்லது வீக்கம் வந்திருக்கிறதோ, அந்த டயரை மாற்ற வேண்டும்.

உபயோகிக்கப்பட்ட டயர்களை வாங்கும்போது உஷாராக இருக்க வேண்டும். அது விபத்துக்குள்ளான டயராக இருக்கலாம். அதனுடைய உள் பலம் சேதம் பற்றி நமக்குத் தெரியாது.

உங்கள் டயரை மாதம் ஒரு முறையாவது சோதனை செய்வது நலம். குறிப்பாகக் கழுவின பிறகு, சோதனை செய்யலாம். சோப்புத் தண்ணீரில் கழுவினால் ஓட்டை இருந்தால் நீர்க்குமிழி காட்டிக் கொடுத்துவிடும்.